## அல்லாஹ்வின் கட்டளை

وَاٰتُوا النِّسَآءَ صَدُقٰتِهِنَّ نِحْلَةً ؕ فَاِنْ طِبْنَ لَكُمْ عَنْ شَیْءٍ مِّنْهُ نَفْسًا فَكُلُوْهُ هَنِیْٓـًٔا مَّرِیْٓـًٔا ۝

பெண்களுக்கு அவர்களின் மஹர்களை மனவிருப்புடன் கொடுத்து விடுங்கள். பின்னர் அவர்கள் அதிலிருந்து ஒரு பகுதியினைத் தாங்களாகவே மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தந்தால் உங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாகவும், முடிவைப் பொறுத்தவரை நல்லதாயும் இருக்குமென அறிந்து கொண்டு நீங்கள் அதை உண்ணுங்கள். (4:5)


بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 23

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

11 ஷவ்வால் 1441 ஹிஜ்ரி கமரி 04 இஹ்ஸான் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
04 ஜூன் 2020


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**முஸ்லிம் மரணிக்கும்போது கற்பூரத்தை பயன்படுத்துவது சுன்னத்தாகும். இது எதனால் என்றால், கற்பூரம் எப்படிப்பட்ட பொருளாக உள்ளது என்றால் அது தொற்றுக் கிருமிகளை அழிக்கின்றது. பாதிப்பை நீக்குகின்றது. மனிதனுக்கு குளிர்ச்சியைத் தருகின்றது. நிறைய கெட்ட நோய்களை தடுக்கின்றது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### தவ்பாவின் மூன்று நிபந்தனைகள்

மூன்றாவது நிபந்தனை அஸம் ஆகும். அதாவது எதிர்காலத்திற்காக, இனி அந்த தீமைகளின் பக்கம் திரும்ப மாட்டேன் என உறுதி எடுத்துக் கொள்ளுதல். அவர் வருந்துகின்றபோது அல்லாஹ் அவருக்கு உண்மையான தவ்பாவின் பாக்கியத்தை வழங்குவான். எதுவரையென்றால் அந்தத் தீமைகள் அவரிடமிருந்து முற்றாக அழிந்து, நல்லொழுக்கம் மற்றும் புகழுக்குரிய செயல்கள் அதன் இடத்தைப் பிடித்துக்கொள்ளும். இது அக்லாக்கின் மீதான வெற்றியாகும். இதில் ஆற்றலையும் சக்தியையும் வழங்குவது அல்லாஹ்வின் வேலையாகும். காரணம், அனைத்து சக்திகள் மற்றும் ஆற்றல்களின் அதிபதியாக அவனே இருக்கின்றான்.

அனைத்து ஆற்றல்களும் அல்லாஹ்விற்கே உரித்தானதாகும். மனிதன் பலகீனமான படைப்பாக இருக்கின்றான். எனவே இறைவனிடமிருந்து ஆற்றலைப் பெறுவதற்கு மேற்கண்ட மூன்று நிபந்தனைகளை முழுமையாக்கி மனிதன் அசட்டை மற்றும் சோம்பலை விட்டுவிட வேண்டும். உடலாலும் மனதாலும் இறைவனிடம் துஆ கேட்க வேண்டும். அல்லாஹ் அக்லாக்கில் மாற்றத்தை ஏற்படுத்தி விடுவான்.

### கற்பூரத்தின் சிறப்புகள்

முஸ்லிம் மரணிக்கும்போது கற்பூரத்தை பயன்படுத்துவது சுன்னத்தாகும். இது எதனால் என்றால், கற்பூரம் எப்படிப்பட்ட பொருளாக உள்ளது என்றால் அது தொற்றுக் கிருமிகளை அழிக்கின்றது. பாதிப்பை நீக்குகின்றது. மனிதனுக்கு குளிர்ச்சியைத் தருகின்றது. நிறைய கெட்ட நோய்களை தடுக்கின்றது. எனவேதான் திருக்குர்ஆனில் கட்டளை உள்ளது. முஃமின்களுக்கு கற்பூர சர்பத் குடிப்பதற்கு கொடுக்கப்படும்.

இன்றைய நாட்களிலும் ஆய்வுகளில் இருந்து, கற்பூரம் காலராவிற்கு பயனுள்ளதாக இருப்பதைப்போன்று பிளேக்கிற்கும் பயனுள்ளதாகும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. நான் எனது ஜமாஅத்திற்கு இது மிகவும் பயனுள்ள பொருள் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எனது நம்பிக்கையாகும்.


ஏனென்றால் திருக்குர்ஆன் கூறுகின்றது, இது எரிச்சலைத் தடுக்கின்றது. அவருக்கு நிம்மதியையும் சுவாசப் புத்துணர்வையும் அளிக்கின்றது. இது நம்மை இதன் பக்கம் அதாவது கற்பூரத்தை பயன்படுத்துமாறு கவனமூட்டுகின்றது. இன்றைய நாட்களில் மற்றுமொரு விஷயமும் நிரூபணமாகி உள்ளது. அதாவது கற்பூரத்துடன் பூலாங்கிழங்கை பயன்படுத்த வேண்டும். எனவே பூலாங்கிழங்கை வினிகர் கலந்து உருண்டையாக்கிக் கொள்ள வேண்டும். இரண்டு இரண்டு கிராம் உருண்டையாக செய்து கொண்டு புதிய மோருடன் பயன்படுத்துங்கள். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இந்த உருண்டைகளை தினமும் பன்படுத்தக் கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நாமும் ஒரு மருந்தை தயார் செய்து வருகின்றோம். அது இறைவன் நாடினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

உண்மையில் இந்த அறிவற்ற நோய் எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால் அல்லாஹ் அருள் செய்தாலேயன்றி எந்த மருத்துவத்தின் மீதும் நம்பிக்கை வைப்பது தவறாகும். ஆனால் பொதுவான ஆரோக்கிய காரணிகள் மற்றும் ஆரோக்கிய விதிகளிலிருந்து வரும்முன் காப்பதும் ஒரு உயர்வான பொருளாக இருக்கின்றது. மேலும் பயனுள்ளதாக நிரூபணமாகி உள்ளது. எனவே தொற்று மற்றும் பாதிப்பை ஏற்படுத்தும் பொருள்களிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டியது நல்லதாகும். இரத்த ஓட்டத்தை வேகமாக்கக்கூடிய சில தீவிர உணவுகளிலிருந்தும், அதிக இறைச்சி, அதிக இனிப்பு போன்றவை அல்லது அதிக வெயிலில் சுற்றுவது, அல்லது கடினமான மற்றும் ஓய்வற்ற வேலை செய்வதிலிருந்தும் தவிர்ந்து கொள்வது நல்லதாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 119,120 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஏதாவது கேட்க வேண்டும் என்றால் பிறகு இறைவனிடம் கேளுங்கள். வேறு எவரிடமும் கேட்காதீர்கள். இது மிகவும் முக்கியமான சிறப்பம்சமாகும். வாழ்க்கையை அர்ப்பணித்த ஒவ்வொருவரும் இதனை பேணி நடக்க முயற்சி செய்ய வேண்டும்**

**நமது ஒவ்வொரு மருத்துவர்களும் தமது தொழில் திறமை மீது நம்பிக்கை கொள்ளக் கூடாது. மாறாக சிகிச்சை செய்யும்போது நோயாளிகளுடன் நல்ல முறையில் நடக்கின்ற அதேவேளையில் அவர்களுக்காக கண்டிப்பாக துஆவும் செய்ய வேண்டும். மேலும் (அவர்களுக்காக) நஃபில் தொழுதால் இது மிகவும் நல்ல விஷயமாகும்**

**உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கி அவர்கள் செய்திருந்த பைஅத் வாக்குறுதியை நிறைவேற்றிய, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் உரிமையை நிறைவேற்றிய, அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு முழுமையாகக் கட்டுப்படுதலும், கலப்பற்ற தொடர்பை வைத்திருந்த, அடியார்களின் உரிமையை நிறைவேற்றிய, மேலும் இஸ்லாத்தின் அழகிய போதனையின்படி அமல் செய்ய வைப்பதற்காகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை நேசரை அனுப்பி இருந்தான் என்பததை செயல் முன்மாதிரின் மூலமாக நிரூபித்துக் காட்டிய மூன்று மர்ஹூம்கள் மதிப்பிற்குரிய இந்தோநேஷியாவின் முபல்லிக் ஸுல்பிகார் அஹ்மது தாமானக் சாஹிப் மற்றும் பாகிஸ்தான் இஸ்லாமாபாதைச் சார்ந்த டாக்டர் முஹம்மது நகீயுத்தீன் சாஹிப் மற்றும் வாழ்க்கையை அர்ப்பணித்த உணர்வுடன் தொண்டாற்றிய மதிப்பிற்குரிய குலாம் முஸ்தஃபா சாஹிப் ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்... கூறினார்கள்: இந்த மக்கள் ஷஹீதுகளைச் சார்ந்தவர்கள் ஆவர்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 மே 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **01 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இப்போது நான், கடந்த சில நாள்களுக்கு முன்னர் மரணித்த சில மர்ஹூம்களைப் பற்றி கூறுவேன். அவர்களில் ஒவ்வொருவரும் பல்வேறு துறையைச் சார்ந்தவர்களாகவும், பணிவுள்ளவர்களாகவும் இருந்தனர். அவர்களின் கல்வித் தகுதி பலவகைப்பட்டது. ஆனால் ஒரு விஷயம் அவர்கள் அனைவரிடமும் ஒன்றுபட்டிருந்தது. அது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருவதாக அவர்கள் செய்திருந்த பைஅத் வாக்குறுதியைத் தத்தமது சக்திக்கேற்ப நிறைவேற்றும் விஷயமும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் உரிமையை நிறைவேற்றுதலும், அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு முழுமையாகக் கட்டுப்படுதலும், கலப்பற்ற தொடர்பு கொள்ளுதலும், அடியார்களின் உரிமையை நிறைவேற்றுதலும் ஆகிய விஷயங்களில் ஒன்றுபட்டிருந்தனர்.

இவை அனைத்தும் இஸ்லாத்தின் அழகிய போதனையின்படி அமல் செய்ய வைப்பதற்காகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை நேசரை அனுப்பி இருந்தான் என்பதன் செயல் முன்மாதிரி அவர்களிடம் காணப்பட்டது என்பதைக் காட்டுகிறது.

நான் ஒரு விஷயம் அனைவரிடமும் ஒன்றுபட்டிருந்தது என்று கூறினேன். ஆனால் ஒன்றல்ல; பல சிறப்புகள் அவர்களிடம் ஒன்றுபோல் அமைந்திருந்தன. அவர்களின் சம்பவங்களைக் கேட்டு ஒரு திட உறுதி ஏற்படுகிறது. அடியாருக்கும் இறைவனுக்கும் இடையில் உண்மையான தொடர்பு ஏற்படுத்தும் உண்மையான நடைமுறை இதன் மூலம் நமக்கு தெரிய வருகிறது. இறைவன் உயிருடன் இருப்பது பற்றி முழுமையான திட உறுதியும், அவனது திருப்தியில் திருப்தி கொள்வதில் உயரிய தகுதியைப் பெறுபவர்களைப் பற்றியும் நமக்கு அறியக் கிடைக்கிறது.

இந்த மர்ஹூம்களின் நற்குறிப்பைக் கூறுகிறேன். அதில் ஒருவர் நமது ஜமாஅத் முபல்லிக் ஸுல்பிகார் அஹ்மது தாமானக் சாஹிப். இவர் இந்தோனேஷியாவின் முபல்லிக் ஆவார். இவர் 21 ஏப்ரல் அன்று தமது 42 வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் 24 மே 1978 –ல் நார்த் சுமத்ராவில் பிறந்தார். இவரது தந்தை பெயர் சஹ்வல் தமானக் ஆகும். இவரது தந்தைவழிப் பாட்டனார் சஹ்நூர் தமானக் ஆவார். மர்ஹூம் குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவரது தந்தைவழிப் பாட்டனார் மூலம் ஏற்பட்டது. இவர் 1944 –ல் மவ்லானா ஸஹ்னி ஸஹ்லான் சாஹிப் மூலம் பைஅத் செய்திருந்தார். மர்ஹூம் இயக்க முரப்பியாகிய ஸுல்பிகார் அஹ்மது சாஹிப் 1997 முதல் 2002 வரை ஜாமிஆ அஹ்மதிய்யா இந்தோனேஷியாவில் கல்வி கற்றார். அப்போது அங்கு கோர்ஸ் சிறிய அளவில் இருந்தது. பிறகு இவருக்கு 18 வருடங்கள் பல்வேறு பகுதிகளில் இயக்க முபல்லிக் ஆக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இவர் பல்வேறு பகுதிகளில் முபல்லிக் ஆக பணியாற்றி வந்தார். இவரது நினைவாக ஒரு மனைவி கண்ணியத்திற்குரிய மர்யம் சித்தீகா சாஹிபா மற்றும் நான்கு பிள்ளைகளான ஜாஸிப் ஆயிஷா, கவ்லா, கைரா பாத்திமா. கைரா நஸிரா என்ற 15 வயது சிறிய மகள். பிறகு 8 மாதக் குழந்தை. இவர்கள் அனைவரும் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

நமது முபல்லிக் மிஃராஜுத்தீன் சாஹிப் அங்கிருந்து கூறுகிறார்: ஸுல்பிகார் சாஹிப் மிகவும் வெற்றிக்குரிய உழைத்துப் பணி செய்யும் முபல்லிக் ஆவார். அவரது போஸ்டிங் எங்கு தரப்பட்டாலும் தர்பிய்யத் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்துவதிலும் தப்லீக் பணிகளிலும் மிகவும் முழு மூச்சுடன் பணி செய்பவர். இவர் எல்லாருடனும் மென்மையாகப் பேசுபவர். எல்லாருடனும் நட்புடன் பழகுவார். சந்திக்கும்போது சிரித்த முகத்துடன் சந்திப்பார். எவரிடமும் எதனையும் கேட்க மாட்டார். மாறாக, எப்போதும் துஆ செய்யுமாறு வேண்டுவார்.

இதுவே வாழ்வை அர்ப்பணித்தவரின் உயிர் ஆகும். எல்லாரிடமும் இந்த உணர்வு இருக்க வேண்டும். எப்போதும்

எதையாவது வேண்டினால் இறைவனிடம் வேண்டுங்கள். எவரிடமும் எந்த வேண்டுகோளும் வைக்கக் கூடாது. இந்த இறப்பை ஒவ்வொரு வாழ்வை அர்ப்பணித்தவரும் தம்மிடம் கொள்ள வேண்டும். இவர் அல்லாஹ்வின் அருளால் நிறைய பைஅத்துக்களை செய்ய வைத்த முபல்லிக்குகளில் ஒருவர் ஆவார். இதனால் இவருக்கு ஜமாஅத் ஏற்பாட்டின் கீழ் 2018 –ல் மாநாட்டிற்கு வருவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. செயற்களத்தில் இவர் நல்ல திட்டங்களுடன் நன்றாக பணி செய்பவராக இருந்தார். இதனால் இவருக்கு எல்லா பக்கமும் நல்ல வெற்றி கிடைத்தது.

அதுபோன்று இயக்க முபல்லிக் ஆஸிஃப் மயீன் சாஹிப் கூறுகிறார்: இவரது நிறைய சிறப்புகளைக் குறிப்பிட்டுள்ளார். இவர் ஸாலிஹ் (நல்லடியார்) ஆக இருந்தார். மிகவும் கட்டுப்படுள்ளவர். மிகவும் நோயுற்ற நிலையிலும் கூட பெரும் நோயுற்றிருந்தார் என்ற போதிலும் ஜமாஅத் சேவைக்கு முன்னுரிமை வழங்கினார். மர்ஹூம், ரியாவ் பகுதியின் மண்டலத்தில் முபல்லிக் ஆக இருக்கும்போது அவரிடம் நான் சென்றுள்ளேன் என்று ஆஸிம் சாஹிப் கூறுகிறார். அவருக்கு மர்ஹூமின் கீழ் பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

அவர் கூறுகிறார்: மிகவும் ஆளுமையுடன் பணி செய்ய வைப்பார். அரசு மற்றும் பல மாநிலங்களுடன் நல்ல தொடர்பு வைத்திருந்தார். இதனால் இவருக்கு பலமுறை பல்வேறு பல்கலைக்கழகங்களில் சொற்பொழிவாற்றும் வாய்ப்பு கிடைத்திருந்தது. அதுபோன்று முழு மாநிலத்திலும் கடந்த தலைமுறைகளுடன் தொடர்பு வைத்து ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

இவ்வாறு மாநிலம் முழுவதும் பணி செய்து வந்தார். ஓர் உள்ளூர் ஜமாஅத் ஆகிய சுனூக்கியுடன் 20 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்பை ஏற்படுத்தும் வாய்ப்பு பெற்றார். இவர்கள் கடந்த தலைமுறை என்று சொல்லப்படுபவர்களைச் சந்திக்க கப்பல்களில் பல்வேறு தீவுகளுக்குச் செல்ல வேண்டியது ஏற்படும். ஒரு தீவிலிருந்து மற்ற தீவுக்குச் செல்ல ஓரிரு மணி நேரம் பயணம் இருக்கும். இவர் நோயாளியாக இருந்த நிலையில் கூட துணிந்து செல்வார். என்னிடம் சக்தி இருக்கும் வரை இறுதி மூச்சு வரை சேவை செய்து வருவேன் என்று கூறுவார்.

இந்தப் பயணங்களின் விளைவில் நான்கு குடும்பங்கள் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் மடியில் வந்தது. இவர் டயாலிஸிஸ் செய்திருந்தார். இந்த நிலையிலும் உள்ளூர் கூட்டத்தில் கலந்து கொண்டார். அங்கிருந்து ஒரு காதிம், ஏன் இவ்வளவு சிரமம் மேற்கொள்கிறீர்கள்? என்று கேட்டபோது, எனது உயிர் இருக்கும் வரை ஜமாஅத்தின் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள முயற்சி செய்வேன் என்றும், நான் நோயுற்றிருந்தும் கூட எனது விருப்பம் மார்க்கச் சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதாகும் என்றும் கூறினார்.

சிறு சிறு விஷயத்திற்கெல்லாம் தமது கஷ்டத்தை சிலர் வெளியே கூறிக் கொண்டே இருப்பது போன்று அல்லாமல், இதுவே ஒரு வாழ்வை அர்ப்பணித்தவரின் உணர்வு ஆகும். ஒவ்வொரு வாழ்வை அர்ப்பணித்தவரிடமும் இந்த உணர்வு இருக்க வேண்டும்.

இதுபோன்று அங்குள்ள ஒரு முரப்பி முஸஃப்பர் அஹ்மது சாஹிப் கூறுகிறார்: இவருடன் ஜாமிஆவில் படிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. கடைசியாக காதியானில் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. இவ்வருடம் காதியானுக்கு இவருடன் சென்றிருந்தார். இங்கு வரும் முன்னரே மர்ஹூம் மிகவும் நோயுற்றிருந்தார். நான் காதியான் செல்லும் அளவுக்கு ஆயுள் வழங்குவாயாக என்று வேண்டி வந்தார். கூறி வந்தார். அல்லாஹ் எனக்கு பைத்துல்லாஹ் சென்று உம்ரா செய்யும் வாய்ப்பு தந்தான். காலத்தின் கலீஃபாவைச் சந்திக்கவும் வாய்ப்பு கிடைத்து விட்டது. இப்போது காதியான் வருகை தரும் வாய்ப்பு மட்டும் எஞ்சியுள்ளது என்று கூறி வந்தார்.

அல்லாஹ்வின் அருளால் அவரது அந்த ஆசையையும் நிறைவேற்றி வைத்து விட்டான். காதியான் வருகை தரும் வாய்ப்பு கிடைத்து விட்டது. இவ்வருடம் அங்கு ஜல்ஸா நடக்கவில்லை. இருந்தும் முன்னரே அங்கு சென்று சேர்ந்து விட்டார்கள். இதனால் சுதந்திரமாக இபாதத் செய்யவும் வாய்ப்பு கிடைத்தது.

முரப்பி சாஹிப் எழுதுகிறார்: காதியானில் கடும் குளிரின் காரணத்தால் இவரது உடல்நலம் மிகவும் சீர்கெட்டது. அதனால் இவர் விரைவில் இந்தோனோஷியா திரும்ப வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த நெருக்கடியான நிலையிலும் கூட இவரது நல்ல விருப்பம் நிறைவேறியது. இவருக்கு பைத்துத் துஆ மற்றும் மஸ்ஜித் முபாரக்கில் தொழவும் துஆ செய்யும் வாய்ப்பு கிடைத்தது. பிறகு இவரை நான் வீல் சேரில் அமர்ந்து பெஹஸ்தி மக்பராவுக்கும் ஸியாரத்திற்காக அழைத்துச் சென்றேன். அங்கும் துஆ செய்தார். இவர் மிகவும் முயற்சி செய்து உழைக்கும் முபல்லிக் ஆக இருந்தார். கடும் நோயுற்ற நிலையிலும் கூட தைரியம் இழந்ததில்லை. ஜமாஅத் பணி எது வழங்கப்பட்டாலும் அதனை நிறைவேற்றி விடுவார்.

அதுபோன்று ஸாஜித் சாஹிப் என்ற ஒரு முரப்பி எழுதுகிறார்: இவர் சீனியராக இருந்தாலும் சீனியர்களின் கருத்துக்களையும் கூட தப்லீக் விஷயத்தில் கேட்டுக் கொள்வார். அதற்காகத் தயங்க மாட்டார். இயல்பில் மிகவும் பணிவும் தாழ்மைக் குணமும் இருந்தது. மர்ஹூம் மிகவும் உறுதியான எண்ணம் கொண்டவராக இருந்தார். கடந்த வருடம் இவர் நோயுற்றார். ஆனால் குணமானதும் நீண்ட பயணம் செய்து குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமாவில் பங்கெடுத்தார். நான் தாயினாத்தி ஜமாஅத்தின் முபல்லிக் ஆக இருந்தேன். மிஷன் ஹவுஸ் அலுவலகத்தில் கூட்டம் நடந்தது. தப்லீக் களத்தில் பணி செய்யக்கூடிய முபல்லிக்குளுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. அப்போது இவர் தப்லீக் குழுவை வடிவமைப்பதில் உயரிய பணி செய்வதைக் காண முடிந்தது.

தப்லீக் பணிகளை வெற்றிகரமாக செய்வதற்காக தாயிஆன் (இறைவழியில் அழைப்பாளர்கள்) மற்றும் உள்ளூர் முபல்லிக்குகளின் அமைப்பை உருவாக்கினார். என்னிடம் எப்போதும் பைஅத்தின் எண்ணிக்கையை அப்டேட் செய்ய வேண்டும் என்றும், இந்த மண்டலத்தில் பணி செய்யும் தாயிஆனுக்கு இதனால் தைரியம் ஏற்படும் என்று கூறுவார். பைஅத்துகளின் எண்ணிக்கையைப் பார்ப்பதும் அவர்களுக்கு கூறுவதற்கும் அதனைக் கேட்டுக் கொண்டிருப்பதற்கும் இதுவே காரணம். இதனால் தாயிஆன் ஆக்டிவ் ஆக இருப்பர். மற்ற அமைப்பிலும் இதனால் புதிய பைஅத் செய்பவர்களை கண்காணிக்க இயலும்.

சர்மத் சாஹிப் என்ற முரப்பி கூறுகிறார்: தப்லீக் விஷயத்தில் பணியில் இவருக்கு பெரும் உயர்ந்த உணர்வு இருந்தது. நாங்கள்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் அவர்களை நேர்வழியின்பால் அழைத்தால் அவர்கள் உங்களைப் பின்பற்றமாட்டார்கள். நீங்கள் அவர்களை அழைப்பதும் அல்லது மௌனமாக இருப்பதும் உங்களுக்குச் சமமானதே. (7:194)

Faizal Hameed Ilahi, Tittacherry

வடக்கு சுமத்ரா மண்டலத்தின் புஷ்பானேவில் இருந்து மாநிலத்தின் எல்லைப் பகுதியாகிய சோசா வரை தப்லீக் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து வந்தார். இவர் மிகவும் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் நிகழ்ச்சிகளையும் திட்டங்களையும் தயார் செய்வார்.

அல்லாஹ்வின் அருளால் கணிசமான நேரம் வரை திட்டம் தொடர்ந்தது. பிறகு நிதிக் குறைவினால் திட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. ஆனால் இவரது திட்டத்தின் விளைவால் நிறைய புதிதாக பைஅத் செய்தவர்கள் அதே பகுதியிலிருந்து வந்தனர். அவர் எப்போதும் நம்பிக்கையிழக்கக் கூடாது என்று கூறி வந்தார். நமது பணி தப்லீக் செய்வது, விதை இடுவதாகும். பழம் வேறு ஒருவரிடம் கூட கிடைக்கலாம் என்று கூறுவார்.

எனவே மிகவும் உறுதியான எண்ணத்துடன் தமது உடன்படிக்கையை நிறைவேற்றுபவராக இருந்தார். அல்லாஹ் இவரது தகுதிகளை உயர்த்துவானாக. இவரது மனைவி மக்களை தனது பாதுகாப்பில் வைப்பானாக. தானே அவர்களின் பாதுகாவனாக இருப்பானாக.

இரண்டாவது மர்ஹூம் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்திலுள்ள டாக்டர் மீர் முஹம்மது நகியுத்தீன் சாஹிப் பற்றி கூறுவேன். இவர் 18 ஏப்ரல் 2020 அன்று வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் மரணமாவதற்கு 7 அல்லது 10 நாட்களுக்கு முன்பு கொரானா வைரஸின் தொற்று ஏற்பட்டதன் அறிகுறி வெளிப்பட்டது. இதனால் இவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். முதலில் இவரது உடல்நிலை அதே நிலையில் நீடித்தது. பிறகு மேலும் சீர்கெட்டது. ICU –க்கு மாற்றப்பட்டார். அன்று மாலையில் அல்லாஹ்வின் முன் சென்று சேர்ந்து விட்டார். மர்ஹூமின் நினைவாக மனைவியுடன் ஒரு மகன் நான்கு மகள்கள் இருக்கின்றனர். அனைவரும் திருமணம் ஆனவர்கள். தத்தமது வீடுகள் அவர்களுக்கு இருக்கின்றன.

பீர் முஹம்மது நகியுத்தீன் சாஹிப் தந்தைவழி தாய்வழி குடும்பம் முழுவதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபிகளின் சந்ததிகளாவர். இவரது குடும்பப் பின்னணி சூஃபி அஹ்மது ஜான் சாஹிபிடம் சென்று சேர்கிறது. இவரது தந்தைவழிப் பாட்டனார் மாஸ்டர் நஸீர் ஹுஸைன் சாஹிப் இருவருமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நெருக்கமான சஹாபிகளைச் சார்ந்தவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் பீர் மஹ்ருல் ஹக் சாஹிபுக்கு காதியானில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய வகுப்புத் தோழராக இருக்கும் வாய்ப்பு கிடைத்திருந்தது. லூதியானாவிலிருந்து சிறு வயதில் இடம் பெயர்ந்து காதியான் வந்து விட்டார். சுமார் 6 மாத காலம் பீர் மஹ்ருல் ஹக் சாஹிபின் குடும்பம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டில் தங்கி இருக்கும் வாய்ப்பு பெற்றிருந்தது. கண்ணியத்திற்குரிய டாக்டர் சாஹிபின் தாயார் ஹகீம் முஹம்மது ஹுஸைன் மர்ஹூமே ஈஸா உடைய தந்தைவழிப் பேத்தியாக இருந்தார்.

டாக்டர் பீர் நகியுத்தின் சாஹிப் 1947 –ல் நாட்டின் பிரிவினையின்போது ஒரு வயதை உடையவராக இருந்தார். அநேகமாக இவர் 1946 –ல் பிறந்திருப்பார். இந்த வகையில் இவருக்கு 74 வயதாகிறது. இவர் குடும்பத்துடன் காதியானிலிருந்து இடம் பெயர்ந்து முதலில் லாஹூர் வந்தார். மேலி என்ற வஹாபி மாவட்டத்தில் தங்கினார்.

1970 –ல் நிஸ்தர் மெடிக்கல் காலேஜில் எம்.பி.பி.எஸ் செய்தார். 1975–1976 –ல் இஸ்லாமாபாத்திற்கு மாற்றமானார். அங்கு அரசு மருத்துவமனையில் பணி கிடைத்தது. அங்கு நீண்ட காலம் சேவை செய்த பிறகு பணியை விட்டு விட்டு ஈரான் சென்றார். 2–3 ஆண்டுகள் அங்கு பணி செய்தார். பிறகு திரும்பி பாகிஸ்தான் வந்தார். அங்கு இஸ்லாமாபாத்தில் தமது கிளினிக் ஒன்று திறந்தார். 25–30 வருடங்கள் அங்கு அல்லாஹ்வின் அருளால் கிளினிக் நடத்தி வந்தார். வெற்றிகரமாக செய்து வந்தார். ஏழைகளுக்கு சேவை செய்து வந்தார்.

இஸ்லாமாபாத் ஜமாஅத்தின் அமீர் டாக்டர் அப்துல் பாரி சாஹிப் எழுதுகிறார்: டாக்டர் நகியுத்தீன் சாஹிப் கடந்த 12 வருடங்களாகத் தொடர்ந்து பாகிஸ்தான் இஸ்லாமாபாத் ஜமாஅத்தின் காஸி ஆக சேவை செய்து வந்தார். இவரது தீர்ப்புகள் எப்போதும் திருக்குர்ஆன் சுன்னத் அடிப்படையில் அமைந்திருக்கும். இரு தரப்பினருக்கும் மிகவும் திருப்திகரமானதாக அமைந்திருக்கும். எப்போதும் நல்லொழுக்கம் இனிய நடைமுறை உள்ளவராகவும், பரிவுள்ளவராகவும் ஏழைகளின் மீது கனிவுடன் நடக்கக் கூடியவராகவும் இருந்தார்.

எல்லோரையும் புன்னகைத்த முகத்துடன் சந்திப்பார். தொழிலின் அடிப்படையில் டாக்டராக இருந்ததால் இரவும் பகலும் இறைப் படைப்பினங்களுக்கு சேவை செய்ய முன் நிற்பவராக இருந்தார். ஜமாஅத்தின் ஏழை மற்றும் நாதியற்ற மக்களுக்கு இவரது கிளினிக் எப்போதும் திறந்தே இருந்தது. மக்களுக்கு எப்போதும் சேவை செய்யக் கூடியவராக இருந்தார். இவரது கருணை பரந்திருந்தது. ஜமாஅத் அல்லாத மக்களும் அதில் நிறைய மக்கள் பயன் பெற்றனர். அல்லாஹ் இவருக்கு எடுத்துச் சொல்லும் திறனையும் வழங்கி இருந்தான். ஜமாஅத் அல்லாதவர்களுக்கு உண்மையை எடுத்தியம்பும் திறன் பெற்றிருந்தார். எந்தவொரு வாய்ப்பையும் கைவிட மாட்டார். எந்த நிலையிலும் உண்மையை எடுத்துக் கூறி விடுவார்.

டாக்டர் கூறி வந்தார். 1970 –ல் நான் எம்.பி.பி.எஸ் தேர்ச்சி பெற்றபோது எமது தந்தைவழிப் பாட்டனார் பீர் மஹ்ருல் ஹக் சாஹிபுடன் ரப்வா சென்றேன். அவர் எனக்கு ஒரு நற்செய்தி கூறினார். ‘நீர்தான் இந்தக் குடும்பத்தின் டாக்டர் ஆகியிருக்கும் முதல் மனிதர்’ என்பதே அந்த நற்செய்தி. எனது தந்தைவழிப் பாட்டனார் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். பல்வேறு போதனைகள் செய்த பிறகு உனது நோயாளிகளுக்கு மருந்துகள் கொடுப்பதுடன் அவர்களுக்காக துஆவும் செய்ய வேண்டும். ஒரு மருத்துவர் தமது நோயாளிகளுக்காக துஆ செய்யவில்லை எனில் தமது வைத்தியத்தை மட்டுமே நம்பி இருக்கிறார் எனில் அவரது செயல் இணை வைப்பைச் சார்ந்தது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்றும் கூறினார்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எம் அடையாளங்களைப் பொய்ப்படுத்திய சமுதாயத்தினரின் நிலை மிகக் கெட்டது. மேலும் அவர்கள் தமக்குத்தாமே தீங்கிழைக்கின்றனர். அல்லாஹ் வழியாட்டியவனே நேர்வழி பெற்றவன். எவர்களை அவன் வழிகேட்டில் விட்டுவிட்டானோ, அவர்களே இழப்பிற்குரியோர் ஆவர். (7:178,179)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

மேலும் டாக்டர் நகியுத்தீன் சாஹிப் கூறினார்: நான் வைத்தியம் செய்ய ஆரம்பித்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் 50 ஆண்டுகளாக எனது தந்தைவழிப் பாட்டனாரின் வார்த்தையின்படி அமல் செய்தவாறு என்னிடம் வரும் நோயாளிகளுக்காக குறைந்த செலவில் வைத்தியம் வழங்குவதுடன் தொய்வின்றி தினமும் 2 ரக்அத் நஃபில் தொழுகிறேன். அவர்களுக்காக துஆவும் செய்கிறேன்.

இதனையே நமது ஒவ்வொரு டாக்டரும் வைத்தியரும் மேற்கொள்ள வேண்டும். தமது தொழில் திறமையை மட்டுமே சார்ந்தும், தமது மருந்துகளை மட்டுமே நம்பியும் தொழில் செய்யாமல் சிகிச்சையுடன் அவர்களுக்காக துஆவும் செய்து வர வேண்டும். நஃபில் தொழுவது மிகவும் சிறந்த விஷயமாகும்.

இவரது மனைவி உஸ்மி நகி சாஹிபா கூறுகிறார்: எனது கணவர் மிகவும் பற்றுள்ள அஹ்மதி ஆவார். தப்லீக் செய்வதில் மிகவும் பைத்தியமாக இருக்கும் அளவுக்கு ஆர்வமுள்ளவர். அவரது வாழ்வில் பல பைஅத்துகளும் செய்யச் செய்துள்ளார். பலரை அஹ்மதிய்யத்தின் உண்மையை ஒப்புக் கொள்ளவும் வைத்துள்ளார். பலர் பயத்தினாலோ ஏதாவது ஒரு காரணத்தாலோ அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

ஆனால் அவர்களை குறைந்தபட்சம் அஹ்மதிய்யத்தின் உண்மையை ஒப்புக் கொள்ளச் செய்துள்ளார். அவர்களின் வாயை மூடச் செய்து உள்ளார். பிறகு எங்களுடன் தொடர்பும் நன்றாக வைத்திருந்தார். பிறகு நோயாளிகளின் மீதுள்ள அன்பின் காரணத்தால் அவர்களுக்காக 2 ரக்அத் நஃபில் தொழுது வந்தார். நோயாளிகளின் மீது கொண்ட பரிவினால் தொற்றுநோய் காலத்திலும் கிளினிக் செல்வார். எனது நோயாளிகள் சிரமப்படக் கூடாது என்பார். காய்ச்சல் ஏற்பட்டபோதுதான் விடுப்பு எடுப்பார்.

பிறகு எழுதுகிறார்: இவரது மிகச் சிறந்த சிறப்பு நோயாளிகளைப் பரிசோதித்து அவர்களுக்காக கவனம் செலுத்தி துஆ செய்து வந்ததுடன் சகித்துக் கொள்ளும் மகனாகவும், சாதாரண கணவராகவும், பொறுப்பான தந்தையாகவும், கனிவுமிக்க சகோதரராகவும் இருந்தார். உயிருள்ள இறைவனுடன் ஆழிய தொடர்பு கொண்டவராக இருந்தார். மிகவும் அதிகமாக துஆ செய்பவராக இருந்தார். உயிருள்ள நிலைத்து நிற்கும் இறைவன் அவரது துஆவுக்கு பதிலும் அளித்து வந்தான். எங்களது ஒரு மகள் திருமணமாகி சில வருடங்கள் குழந்தை இல்லாமல் இருந்தாள். அவளுக்காக அதிகமாக துஆ செய்து வந்தார்.

ஓரிரவு அந்த மகளின் வீட்டில் இருந்தோம். காலையில் வாஷ் ரூமிலிருந்து வெளிப்பட்டதும் சுபுஹ் நேரத்தில் உளூ செய்து விட்டு வரும்போது சிறிது குனிந்தார். கேட்டபோது கஷ்ஃப் நிலையில் அவர் ஒரு சிறுவனைப் பார்த்ததாகக் கூறினார்.

அவர் கூறினார்: அந்தச் சிறுவன் கீழே விழ இருந்தான். நான் அவனைப் பிடிப்பதற்காக குனிந்தேன் என்றார். இந்தச் சம்பவத்திற்குச் சிறிது காலத்தில் அல்லாஹ் அருள் புரிந்தான். எனது மகளுக்கு ஓர் ஆண் குழந்தையை வழங்கினான். நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. அல்லாஹ் அந்தச் சிறுவனையும் மார்க்கச் சேவகனாக ஆக்குவானாக.

அவரது சகோதரி மகனும் மருமகனுமாகிய அர்ஷத் இஃஜாஸ் சாஹிப் கூறுகிறார்: மர்ஹூம் எனது மூத்த மாமா ஆவார். அந்த உணர்வு இருந்தது. நிறைய விஷயங்களை அவரிடம் கேட்டேன்; பார்த்தேன். அவர் அதிகம் துஆ செய்பவர். ஏழைகளைப் பராமரிப்பவர். தன்னலமற்றவர். மிகவும் மனிதாபமானமிக்கவர். சிரமத்திலும் சிரமமான காலத்திலும் இந்தக் கட்டளைகளைக் கவனத்தில் கொள்பவர். உலகியல் ரீதியாகவோ ஜமாஅத் அளவிலானதோ எந்தவொரு மார்க்க விளக்கம் கேட்க வேண்டும் என்று நினைத்தாலும் எல்லாருக்கும் முதலில் தயங்காமல் எனது மனதில் மாமாவிடம் கேட்க வேண்டும் என்றே தோன்றும். மாமு என்று அவர் டாக்டர் சாஹிபைப் பற்றி கூறுகிறார்.

மாமு உடைய இன்னொரு கஷ்ஃப் ஒருவேளை வேறு யாருக்கும் கூட தெரிந்திருக்கலாம். அது M.T.A சம்பந்தப்பட்ட கஷ்ஃப் ஆகும். அது அநேகமாக 2010 –ல் நடந்த சம்பவமாகும். அப்போது தற்போதை மொபைல் போன்கள், டச் மொபைல் போன்றவை குறைந்தபட்சம் பாகிஸ்தானில் மட்டுமாவது சகஜமாக வராத காலம் என்று கூறலாம். நான் மாமு அருகில் அமர்ந்திருந்தேன். அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அவர் கூறினார். சில காலம் முன்பு நான் பார்த்தேன். ஓர் அறிவிப்பு செய்யப்படுகிறது. ஒரு தொழுகை அழைப்பு (அஸான்) போன்று கேட்கிறது. மக்கள் தமது சட்டைப் பையிலிருந்து ஒரு பொருளை எடுத்து காதில் மாட்டிக் கொள்கின்றனர். என்னவென்று கேட்கும்போது கலீஃபத்துல் மஸீஹ் உடைய குத்பாவின் நேரம். எல்லா மக்களும் நேரலையாகக் குத்பா கேட்கிறார்கள். இந்தக் காட்சியை இப்போது ஒவ்வொரு வாரமும் நிறைவேறக் காண்கிறோம்.

பிறகு எழுதுகிறார்: சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் உடைய குடும்பமான தாம் மட்டுமே அந்தக் கண்ணியத்தைப் பெற்றதாக இருக்காமல் மற்றவர்களையும் குடும்பத்தின் மற்ற நபர்களையும் கவனமூட்டியது. அல்லாஹ்வுடன் சுய தொடர்பு இருக்க வேண்டும். வெறும் பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர் என்பது மட்டுமே பெரும் முழுமையாகாது என்றனர்.

எனவே அசல் விஷயம் சுயம் இறைவனுடன் தொடர்பு கொள்ள வேண்டும். எப்போதும் இறைவன் பக்கம் அழைக்கும் ஆர்வம் இருந்தது. பலரும் இந்த விஷயத்தை எழுதியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் கூற இயலாது. இறைவன் பக்கம் அழைப்பதில் பெரும் ஆர்வம் இருந்தது. அழகிய முறையில் திருக்குர்ஆன் வசனத்தை ஓதி பொருளைக் கூறி எடுத்து வைப்பார். ஆண்டு மாநாட்டின் வேளையில் மக்களை தமது வீட்டிற்கு அழைத்து வந்து விமரிசையாக உணவளித்து மாநாட்டையும் கேட்க வைப்பார். இவ்வாறு தப்லீகின் தொடர் ஆரம்பமாகும்.

கரோனா தொற்றுநோய் வெளிப்பட்டபோதும் இவர் கிளினிக்கை மூடவில்லை. நான் பலமுறை போன் செய்து கூறினேன். கிளினிக் போக வேண்டாம் என்றேன். டாக்டர் வீட்டில் அமர்ந்து கொண்டால் நோயாளி என்ன செய்வார்? என்றே கூறுவார். பிறகு ஆதாரமும் தருவார். பிறகு மிகவும் நோயுற்ற நிலையிலும் கிளினிக் செய்வார். எப்போதும் நாம் சேவை செய்யவே வருகிறோம் என்று கூறுவார். நமது டியூட்டியைத் தருகிறோம். பணம் சம்பாதிப்பது நமது நோக்கமல்ல என்பார்.

## திருக்குர்ஆனிலிருந்து...

முழுமையான நற்பண்புகள் (எல்லாம்) அல்லாஹ்வுக்கே உரியன. எனவே நீங்கள் அவற்றைக் கொண்டு அவனிடம் வேண்டுங்கள். அவனுடைய பண்புகளைக் குறித்து தவறிழைப்பவர்களை விட்டு விடுங்கள். அவர்களுக்கு அவர்களின் செயல்களுக்குரிய கூலி கொடுக்கப்படும். (7:181)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

இவரது மகள் நூரின் ஆயிஷா நூருத்தீன் கூறுகிறார்: எனது தந்தையார் மிகவும் கனிவும் தயவும் உடைய இரக்கம் மிக்க துஆ செய்யக்கூடிய தந்தை ஆவார். எப்போதும் எல்லா விஷயத்திலும் அதிகம் துஆ செய்யவும் அல்லாஹ்வுடன் தொடர்பு வைக்கவும் போதனை செய்வார்.

அவர் கூறுகிறார்: எதற்காவது நாங்கள் துஆ செய்யுமாறு கூறினால் நீங்களும் துஆ செய்யுங்கள். நானும் துஆ செய்வேன் என்பார். பிறகு இறைவனிடம் இருந்து வழிகாட்டல் பெற்று இவ்வாறு அல்லாஹ் கூறினான் என்று கூறுவார். தொழிலின் அடிப்படையில் ஆயிரக்கணக்கானோர் குணமாகியுள்ளனர். ஆயிரக்கணக்கானோருக்கு சிகிச்சை செய்துள்ளார். மிகவும் குறைந்த ஃபீஸ் வாங்குவார். கடும் ஏழைகளும் அவரது நோயாளியாக சிகிச்சை பெறுவார்கள்.

பிறகு எழுதுகிறார்: எமது தந்தை நடந்து திரியும் ஒரு குர்ஆன் ஆக இருந்தார். எது விஷயத்திலும் திருக்குர்ஆனின் வழிகாட்டல் கேட்டால் வசனத்தை ஓதி அர்த்தம் கூறி விளக்குவார். கிலாஃபத்தின் மீது பெரும் அன்பு நேசம் இருந்தது. M.T.A –வில் ஒரு மணி நேரம் குத்பா வரத் தொடங்கியதும் வீட்டில் டிஷ்ஷிற்கான ஏற்பாடு செய்தார். மக்கள் M.T.A பார்க்க வீட்டிற்கு வருவதற்காக அவ்வாறு செய்தார். கிலாஃபத்தின் மீது கொண்ட நேசத்தினால் நிறைவுரையை பல அஹ்மதி அல்லாதவர்கள் வரை அழைத்துக் கேட்கச் செய்வார். பைஅத் நடவடிக்கைகளை காணச் செய்வார். மாநாட்டு நிகழ்ச்சிகளைக் காண்பிக்கும்போதே உணவுக்கும் நல்லதொரு ஏற்பாடு செய்வார். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகள் என்று கூறுவார்.

பிறகு இவரது மகள் வர்தா கூறுகிறார்: சிறு வயதிலிருந்தே எங்களிடம் தொழுகை, குர்ஆன், நோன்பு, குறித்த நேரத்தில் சந்தா வழங்குதல் மற்றும் சதகா கைராத் வழங்குதல் ஆகிய பழக்கங்களை ஏற்படுத்தி விட்டார். சகோதர சகோதரிகளாகிய எங்களுக்கு திருமணம் செய்து வைத்தபோது உலகியல் பொருட்களைப் பொருட்படுத்தவில்லை. மேற்சொன்னவற்றையே கவனத்தில் கொண்டார். சிறு வயதிலிருந்தே எங்களுக்கு ஒரு விஷயம் உங்கள் விருப்பம் நிறைவேறவில்லை எனில் எப்போதும் துஆவுடன் பொறுமையாக இருக்க வேண்டும் என்று போதித்து வந்தார்.

இவரது மருமகன் அப்துல் குத்தூஸ் சாஹிப் கூறுகிறார்: எனது மாமனாரிடம் எனக்குள்ள தொடர்பு ஒரு தந்தையுடன் உள்ள தொடர்பு போன்றதாகும்.

அவர் கூறுகிறார்: எனக்கு இவரைச் சந்திக்க எப்போதும் ஆர்வம் ஏற்படுவதற்குக் காரணம், எப்போதும் புதிய விஷயங்கள், திருக்குர்அன் வசனங்களின் விளக்கம், பல்பொருள் தரும் விவகாரங்கள் ஆகியவற்றைப் புதிய கோணத்தில் கற்றுக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

அவர் கூறுகிறார்: திருமணமான புதிதில் மாமனார் வீட்டில் சகஜமாகப் பழகியதில்லை. ஆனால் அவரது பழக்கத்தினால் எனது கூச்சம் விலகியது. எந்தவொரு உலகியல் விவகாரம், அரசியல், பேஷன் போன்றவற்றில் எந்த ஈடுபாடும் இருந்ததில்லை. இபாதத்துகள், திருக்குர்ஆன் அறிவுகள், நல்லொழுக்கங்கள் ஆகியவைதான் இவரிடம் விருப்பத்தக்க விஷயங்களாக இருந்தன. பித்அத்துகளுக்கு எதிரில் ஒரு உறுதியான பாறையாக இருந்தார்கள். எவராலும் அசைக்கவும் முடிந்ததில்லை. திருமணத்தின் சில சடங்குகளைக் கடுமையாகத் தடுத்து விடுவார். ஏதாவது செயல்களில் ஷிர்க்கின் சாயல் தென்பட்டால் உடனே தடுத்து விடுவார். கடுமையாகத் தடுப்பார்.

அதுபோன்று இவரது மகள் குர்ரதுல் அய்ன் ஹாதி கூறுகிறார்: எவருக்கு எதிராகவும் உள்ளத்தில் எந்த எண்ணமும் கூடாது என்று போதனை செய்தார். தமது கணவர் வீட்டார்களை தம் மக்களைப் போன்று கருத வேண்டும். உங்களது செயலாலோ வார்த்தையாலோ கஷ்டம் தரக்கூடாது என்று கூறுவார்.

பிறகு தமது மகளுக்கு மேலும் கூறினார்: நல்லவருடன் நல்ல முறையில் நடப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல. அசல் விஷயம் மோசமானவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்வதேயாகும். இதுவே இஸ்லாத்தின் போதனையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதைத்தான் தற்காலத்தில் போதித்திருக்கிறார்கள். இதுவே உயரிய நல்லொழுக்கம் ஆகும். இதுவே பிறரை உங்களை நோக்கி ஈர்த்து வரும்.

அவர் கூறுகிறார்: குழப்பம் கொலையை விடக் கொடியது. எனவே அதனை தடுப்பதற்காக உண்மையாளராக இருந்து கொண்டு பொய்யரைப் போன்று பணிவை மேற்கொள்ள வேண்டும் என்று என் தந்தை கூறினார்.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கிய உயரிய போதனையாகும். இந்தப் போதனையை பெற்றோர் தமது குழந்தைகளுக்கு வழங்கி வந்தால் அழகிய சமூகம் நிலைபெறும்.

பிறகு அவரது மகன் பீர் முஹ்யித்தீன் சாஹிப் கூறுகிறார்: நான் கனவில் பார்த்தேன். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் எமது வீட்டிற்கு வந்து தர்ஸ் கொடுக்கிறார்கள். நானும் அமர்ந்திருக்கிறேன். 'இது வீடு அல்ல; வாசல் ஆகும். இது வழியாக அருள் வருகிறது. இதனை விட்டு விடாதே!' என்று என்னைப் பார்த்துக் கூறுகிறார்கள்.

பிறகு என்னைப் பார்த்துக் கூறுகிறார்கள்: 'உமது தந்தை ஒரு வலியுல்லாஹ் ஆவார்கள்' என்று நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறியதாகக் கூறியுள்ளார்கள். ஏழைகளைப் பற்றி மிகவும் வேதனைப்படுவார்கள். நிறைய குடும்பங்களுக்கு மாதாந்திர ரேஷன், குழந்தைகளுக்கு கல்வி, மருந்துகள் மற்றும் சிகிச்சைக்கான செலவுகளைச் செய்து வந்தார்கள். தினமும் 50 சதவீத நோயாளிகளுக்கு இலவச வைத்தியம் செய்வார்கள்.

அதுபோன்று இவரது மருமகன் அப்துஸ் ஸமத் சாஹிப் கூறுகிறார்: திருக்குர்ஆன் மீது அளவு கடந்த நேசம் இருந்தது. ஏதாவது ஆதாரம் தருவதாக இருப்பின் ஒரு வசனத்தைக் கூறி பொருளையும் கூறுவார். எவராவது அஹ்மதி அல்லாதவர் மிர்ஸா குலாம் அஹ்மதுக்கு ஏதாவது அடையாளம், அற்புதம் இருந்தால் கூறுங்கள் என்று கூறினால், 'நான் ஓர் அற்புதம் ஆவேன்' என்று கூறுவார். அவர் ஒரு முழுமையான அஹ்மதியாக இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தமது ஜமாஅத்தின் மீது என்ன ஒரு நம்பிக்கை இருந்ததோ அதனை உண்மைப்படுத்துபவராக இருந்தார்கள். எவராவது அவரைச்

### திருக்குர்ஆனிலிருந்து...

அவர்களால் இவர்களுக்கு (இணை வைப்பவர்களுக்கு) எவ்வுதவியும் செய்ய முடியாது. மேலும் அவர்களால் தமக்குத்தாமே எவ்வுதவியும் செய்ய முடியாது. (7:193)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

சந்தித்தால் அவருக்கு நன்மையின் ஈர்ப்பு ஏற்படும். அந்தப் பெருமை அன்னாரிடம் இருந்தது.

இதுவே ஒரு நல்ல மனிதனின் பெருமையாகும். அவருடன் அமர்பவரும் நல்லவராகி விடுவார். பிறகு நான் ஓர் அடையாளம் என்று கூறி, விட்டு விடுவதில்லை. சில அடையாளங்களை அஹ்மதி அல்லாதவர் கிண்டல் செய்யும்போது இவர் கிண்டல் செய்ய வேண்டாம் என்று கூறி அடையாளங்களை எடுத்து வைப்பார். அஹ்மதி என்ற முறையில் மிர்ஸாயிகள் அமல் செய்கிறார்கள் எனில் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு ஓர் உயிருள்ள அடையாளம் ஆவார்கள். இந்தத் தகுதியை ஒவ்வோர் அஹ்மதியும் தம்மிடம் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். பழைய அடையாளங்களைத் தேடுவதற்குப் பதில் தாம் ஓர் அடையாளமாக மாற வேண்டும்.

அதுபோன்று இஸ்லாமாபத்தின் நாயிப் அமீர் அப்துர் ரவூஃப் சாஹிப் கூறுகிறார்: பலர் இவ்வாறு கூறியுள்ளனர். நாங்கள் வேறு டாக்டரை அறியவே இல்லை. என்ன செய்வோம்? இன்னும் அருகிலுள்ள பல ஜமாஅத்துகளுக்கு சிகிச்சை பற்றிய பிரச்சனையே இருந்ததில்லை. நினைத்தவுடன் டாக்டர் நகி சாஹிப் உடைய கிளினிக்கிற்கு வந்து விடுவார்கள். சிகிச்சை பெற்றுச் செல்வார்கள். அஹ்மதி அல்லாத நண்பர்கள் கூட கூறியுள்ளார்கள். இவர் எமது வீட்டை விடப் பெரியவர். இவரிடம் கேட்காமல் எதுவும் செய்யமாட்டோம் என்று அஹ்மதி அல்லாதவர் கூறுகின்றனர்.

அஹ்மதி அல்லாத குடும்பத்தினர் தனது குடும்பப் பிரச்சனைகள் விஷயத்தில் இவரிடம் வந்து தீர்வைப் பெற்றுச் செல்வர். ஏனெனில் 40 வருட காலமாக அந்த கிளினிக் அங்கு இருக்கிறது. முதலில் தந்தை வந்தார். பிறகு பிள்ளைகள் வரத் தொடங்கி விட்டனர். டாக்டர் சாஹிப் பலரது சம்பவங்களைக் கூறியுள்ளார். பல அஹ்மதி அல்லாத மக்கள் தமது பிள்ளைகளிடம் ஏதாவது பிரச்சனைகள் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது டாக்டர் நகி சாஹிபிடம் ஆலோசனை பெற வேண்டும் என்று போதனை செய்து விட்டு இறந்துள்ளார்கள்.

பிறகு எழுதுகிறார்: கடந்த வருடம் 2019 ஜூன் மாதம் கடைசி ஜுமுஆ அன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு எனது அலுவலகம் வந்து கதவை மூடி விட்டுக் கூறினார். உங்களிடம் ஒரு விஷயம் கூற வேண்டும். அது எனது மனைவிக்குத் தெரியும். நான்கு நாள் முன்னால் கூறுகிறார். நான் கனவில் பார்த்துள்ளேன். ஒரு போர்க்களத்தில் நான் நிற்கிறேன். சடலங்கள் நிறைந்து காணப்பட்டன. ஷஹீதானவர்களில் ஏன் சேரவில்லை? என்று நினைத்தவாறு நிற்கிறேன்.

அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். எவர் 5 காயம் அடைந்தாரோ அவர் ஷஹீதாவார். உடனே நான் என்னைத் திரும்பிக் பார்க்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் இராணுவ அதிகாரி போன்று உயர்ந்த இடத்தில் நிற்கிறார்கள்.

டாக்டர் சாஹிப் கூறுகிறார்: நான் என் காயங்களை எண்ணுகிறேன். 3 காயம் ஆழமாகவும் 2 காயம் காலில் சிராய்ப்பாகவும் இருந்தது. நான் மிகவும் இஸ்திக்ஃபார் செய்தேன். பிறகு கண் திறந்தது. இதன் பொருள் என்னவாக இருக்கும்? என்ற நான் நினைத்தேன். எனக்கு சந்தாவின் பக்கம் கவனம் போடப்பட்டது. அதனைக் கணக்கிட வேண்டும் என்று நினைக்கிறேன். என்னிடம் சோம்பல் ஏற்பட்டு விட்டது. உடனே சுபுஹ் தொழுகைக்கு எழுந்ததும், நான் கணக்கைப் பார்க்கவில்லை என்ற எண்ணம் ஏற்பட்டது. நான் சுபுஹ் தொழுகைக்குப் பிறகு கணக்கிட்டேன். சிறு பகுதி கணக்கு எடுக்கப்படாமல் இருந்தது. நான் 10 இலட்ச ரூபாய் சந்தா செயலரிடம் தந்து விட்டு நான் மிகவும் இஸ்திக்ஃபார் செய்கிறேன் என்று கூறினார்.

இவரது சகோதரி மகன் அஸீஸுர் ரஹ்மான் சாஹிப் அட்வகேட் உடைய மகன் கூறுகிறார்: பலமுறை தமது வாழ்க்கைச் சம்பவங்களைக் கேட்டுள்ளேன். மிகவும் கிளர்ச்சி நிறைந்த காலத்திலும் இவர் இறை அருள் மற்றும் பெற்றோரின் துஆவினாலும் டாக்டர் ஆனார். இவர் காலம் எவ்வாறு கழிந்தது என்று கேள்விப்பட்டுள்ளேன். காகிதம் வாங்க காசு இல்லாத நிலையும் இருந்தது. பயன்படுத்தப்பட்ட காகிதங்களைச் சேர்த்து அதில் குறிப்புகளை எழுதி வைத்துக் கொள்வார். அதுபோன்று ஸ்கூல் படிக்கும்போது கணிதத்திற்கு ஆசிரியர் இருந்ததில்லை. அடுத்து ஊருக்குச் சென்ற அங்கு கணித ஆசிரியரிடம் பயின்று வந்து தமது பள்ளிக் குழந்தைகளுக்கும் கணிதம் கற்றுத் தருவார்.

தொழுகையில் பேணுதல் பற்றி கூறுகிறார்: இவர் சிறுவராக இருந்தபோது இவரும் சகோதரியும் விளையாடி விளையாடி இஷா தொழாமல் தூங்கி விட்டனர். இவருக்கு தொழுகையில் ஆர்வம் ஏற்பட்ட இந்த சம்பவம் மிகவும் சுவையானது. தாயார் தொழுது விட்டாயா? என்று கேட்டதும் தூங்கி விட்டதால் ஆம், தொழுது விட்டேன் என்றவாறு தூங்கி விட்டார். பாதி இரவில் தாயார் அழுதவாறு எழுப்பினார். டாக்டர் சாஹிபின் தாயார் எழுப்பினார். நீ தொழுகை குறித்து என்னிடம் பொய் சொல்லி விட்டாய். தொழுததாகக் கூறி விட்டாய். இறைவன் என்னிடம் கஷ்ஃபில் கூறி விட்டான் என்றார். அந்த நாளுக்குப் பிறகு அவர் தொழுகையை விட்டதில்லை.

இதுவே அஹ்மதி தாய்மார்களின் அந்தஸ்தாகும். குழந்தைகளின் தொழுகை குறித்த தர்பிய்யத்திலும் அதற்காக துஆ செய்தலும் அவர்களிடம் இருக்க வேண்டும். பிறகு உள்ள வேதனையுடன் துஆ செய்யும்போது இறைவன் காட்டி விடவும் செய்கிறான். உமது மகன் தொழவில்லை. அவனை எழுப்பு என்று கூறி விடுகிறான். பிறகு அழுதவாறு அந்தத் தாய் மகனை எழுப்பவும் செய்கிறார். பிறகு இதன் தாக்கத்தால் முழு வாழ்நாளிலும் தொழுகையை விட்டதில்லை என்று கூறுகிறார்.

பெரும்பாலான விஷயங்களுக்கு திருக்குர்ஆனிலிருந்து ஆதாரங்களை எடுத்து வைப்பார். இறைவனுடன் உயிருள்ள தொடர்பு ஏற்படவில்லை எனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் உரிமை நிறைவேறாது. ஹுஸூர் (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கம் இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்துவதுதான் என்று கூறுவார்.

பிறகு இவரது சகோதரி மகன் டாக்டர் அதாவுர் ரஹ்மான் சாஹிப் கூறுகிறார்: திருக்குர்ஆனின் மீது சிந்தனை செய்து கொண்டே இருப்பார். திருக்குர்ஆனின் மீது ஆழிய அறிவு இருந்தது. நீண்ட நீண்ட வசனங்கள் மனனமாக அறிந்திருந்தார். பாகிஸ்தானின் தற்கால சூழ்நிலைகளை அறிந்திருந்தும் கடும் மாற்றுக் கருத்து உடையவர்களையும் வீட்டிற்கு அழைத்து வந்து ஆண்டு மாநாட்டு நிகழ்ச்சிகளையும் குத்பாக்களையும் காண்பிப்பார். அவரது தப்லீகினால் நிறைய பேர் தாக்கத்திற்கு உள்ளாவார்கள். அவர்களால் நிறைய பைஅத்துகளும் நடந்துள்ளன. அல்லாஹ் மர்ஹூம் உடைய தகுதியை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு கண்ணியத்திற்குரிய குலாம் முஸ்தஃபா சாஹிப். இவர் இலண்டனில் இருந்தார். இப்போது டில்போர்ட் வந்து விட்டார். இவர் தன்னார்வத் தொண்டராவார். யூ.கே. –வின் தனிச் செயலர் அலுவலகத்தில் பணி செய்தார். இவருக்கு 25 ஏப்ரல் அன்று

தமது 69 –வது வயதில் வஃபாத் ஏற்பட்டது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

1983 –ல் மூன்றாவது கிலாஃபத்தில் இவர் பைஅத் செய்தார். 1986 –ல் இலண்டன் வந்தார். பள்ளியில் தங்கி இருந்தார். வந்தவுடன் வக்ஃபுக்கு விண்ணப்பித்தார். இவரது கல்வித் தகுதி மிகவும் சாதாரணமாக இருந்தது. இதனால் தானோ என்னவோ ஒருவேளை இவரது வக்ஃப் ஏற்கப்படவில்லை. ஆனால் இவர் வாழ்வை அர்ப்பணித்தவர் போன்று வாழ்ந்து வந்தார். தப்தரின் சமையலறையிலும் பணி செய்தார். இவருக்கு சொந்தத் தொழிலும் இருந்தது. அல்லாஹ் இவருக்கு பெரும் அருள் செய்தான். இவரது வெறும் கையைப் பார்த்து எவ்வளவு பரக்கத் செய்தான் எனில் சிறு சொத்துக்கள் வாங்கவும் வாய்ப்புப் பெற்றார். பிறகு மேலும் சொத்து வாங்க அல்லாஹ் பரக்கத் செய்தான்.

பிறகு ஏழைகளுக்கும் ஜமாஅத்திற்கும் செலவு செய்தார். ஆனால் வாழ்வை அர்ப்பணித்தவர் போன்று நடந்து கொண்டார். நான்காவது கலீஃபாவின் காலத்திலும் சரி எனது காலத்திலும் சரி அலுவலகத்திலிருந்து தமது சொந்தப் பணிக்காக செல்வதாயின், வேறு நாட்டுக்குச் செல்வதாயினும் பெரும் நீண்ட விடுப்பு எடுப்பதாயின் விடுப்பு வாங்கிக் கொள்வார். நான் இந்தப் பகுதிக்குப் போகிறேன். விடுப்பு வேண்டும் என்று வேண்டுகோள் வைப்பார். வக்ஃப் செய்யா விட்டாலும் என்னை வாழ்வை அர்ப்பணித்தவராகக் கருதுகிறேன் என்று கூறுவார்.

மிகவும் நன்றியுடைமையுடன் அல்லாஹ்விடம் தாம் வக்ஃப் செய்ததாக வாக்களித்திருந்தார். எனவே அதனை நிறைவேற்றினார். முறையாக வக்ஃப் செய்தாலும் சரி செய்யா விட்டாலும் சரி பள்ளியில் இவர் தங்கி இருக்கும்போது ஹோட்டலில் பணிக்கு அனுப்பி இருந்தனர். அங்கு வெயிட்டராக பணி கிடைத்தது. அவருக்கு அது நல்ல பணியாகத் தென்படவில்லை. மறுநாள் அதனை விட்டு விட்டு வந்து விட்டார்.

அவர் கூறினார்: எனக்கு பணம் கிடைக்கிற இந்தப் பணியை விட சிறந்தது. நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தினர் மாளிகையில் பாத்திரம் கழுவுவதேயாகும் என்று நினைத்து வலிஷாஹ் சாஹிபுடன் சேர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கிச்சனில் பணி செய்தார். பிறகு சிறப்புப் பாதுகாப்புப் பணியில் டியூட்டி கொடுத்து வந்தார். 1993 –ல் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தனிச் செயலர் அலுவலகத்தில் இவருக்கு டியூட்டி தந்தார்கள். அதிலிருந்து இதுவரை மனமுவந்து தமது டியூட்டியைக் கொடுத்து வந்தார். மர்ஹூம் மூஸி ஆக இருந்தார். இவரது நினைவாக மனைவி தவிர இரு மகள்கள் ஒரு மகன் இருக்கிறார்கள்.

இவரது மனைவி மஹ்மூதா முஸ்தஃபா சாஹிபா எழுதுகிறார்: எனக்கும் முஸ்தஃபா சாஹிப் இருவருக்கும் தொடர்பும் திருமண பந்தமும் 34 வருடம் இருந்துள்ளது. இறைவன் மீது ஆணையாக! இக்காலத்தில் இவரது ஒவ்வோர் அடியும் இறைவனுக்காகவே இருந்தது. நிறைய நற்குணங்களின் உரிமையாளராக இருந்தார்கள்.

களங்கமற்ற கணவர். தந்தை, சகோதரர் மற்றும் நண்பர் ஆவார். உறவுகளைப் பேணுபவர். மிகவும் தொலைநோக்குள்ளவர். ஒவ்வொருவருக்கும் பயன்படுபவர். தொண்டு செய்பவர். துணிச்சல் மிக்கவர். கிலாஃபத்திற்காக தம்மை இழந்து விடும் இருப்பாக இருந்தார். பாகிஸ்தானில் பைஅத் செய்தபோதும், நான் எப்போதும் கிலாஃபத்தின் அருகில் இருப்பேன் என்றவொரு வாக்குறுதி எடுத்துக் கொண்டார். அப்போது அவரிடம் எந்த வசதியும் இருக்கவில்லை. இறை அருளால் அவர் வாக்குறுதியை நிறைவேற்றினார். அல்லாஹ் அதற்கான ஏற்பாட்டைச் செய்தான். பொருள் தியாகத்தில் பெரும் ஆர்வம் இருந்தது. எனக்கு நினைவுள்ளது. எனது மகன் பிறந்தபோது நான் அவரிடம், நான் எனது பாதி நகைகளை ஜமாஅத்திற்கு தரப்போகிறேன் என்றேன். உடனே அவர் கூறினார். ஏன் பாதி தருகிறாய்? முழுமையாகத் தந்து விடு என்றார்.

ஆரம்பத்தில் நடந்த ஒரு சம்பவம். ஆப்பிரிக்காவில் மஸ்ஜிதுகள் கட்டுவதற்கான திட்டம் எடுத்து வைக்கப்பட்டது. அப்போது அவருக்கு வீடு கூட இருக்கவில்லை. ஆனால் சேர்ந்த பணத்தை மஸ்ஜிதின் சந்தாவுக்கு தந்து விட்டார். தமது சொந்த செலவில் கருமி போன்று இருப்பார். ஆனால் அடுத்தவருக்கு செலவு செய்வதற்கு யோசிக்கவே மாட்டார். உண்மையான நம்பிக்கையாளர்போன்று மார்க்கத்திற்கு முன்னுரிமை தந்தார். பிறகு மார்க்கம் உலகம் இரண்டையும் சம்பாதித்தார். எல்லாப் பணிகளிலும் என்னை அருகில் வைத்துக் கொண்டார். அதனால் எனக்கு எல்லாக் காரியங்களும் தெரிவதற்காக அவ்வாறு செய்தார். முழுமையாக நம்பினார்.

பிறகு கூறுகிறார்: முஸ்தஃபா சாஹிப் குடும்பத்தில் தனி அஹ்மதி ஆவார். இவர் பைஅத் செய்தபோது வாக்களித்தார். எனது குடும்பத்திடமிருந்து எதனையும் பெறமாட்டேன். அல்லாஹ்வே! உனது மஸீஹ் உண்மையாளர் எனில் உன் தரப்பலிருந்து நீ வழங்கு. என்னை எவருடைய தேவை உள்ளவனாகவும் ஆக்காதே. அல்லாஹ் அவரது விருப்பத்தை நிறைவேற்றினான். நீ எந்த பைஅத்துக்காக அடியெடுத்து வைத்தாயோ அது உண்மை என்று நிரூபித்துக் காட்டினான். பிறகு அல்லாஹ் பல்வேறு வழிகளிலிருந்து அவருக்கு உதவி செய்தான். பிறகு தமது ஊரில் பெரும் மஸ்ஜித் கட்டினார். எப்படியாவது இம்மக்கள் அஹ்மதியாவார்கள் என்ற எண்ணத்தில் உருவாக்கினார். தமது உறவினர்கள் சகோதரி சகோதரர்களுக்கு பல்வேறு வகையில் உதவி செய்து வந்தார். இவருக்கு தனது துஆவில் பெரும் நிச்சய உறுதி இருந்தது. அதற்கு நிறைய சம்பவங்கள் மேலே எழுதியுள்ளார்கள்.

இவரது மகள் சபியா முஸ்தஃபா கூறுகிறார்: எனது தந்தையாரின் வாழ்வின் நோக்கம் கிலாஃபத் அமைப்பை நேசிப்பதாக இருந்தது. அல்லாஹ்வின் மீது அளவு கடந்த தவக்குல் இருந்தது. எப்போதும் எங்களிடம் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறு துஆ செய்தேன்; நிறைவேறியது என்று கூறி வருவார். எப்போதும் இவரது முயற்சி, கலீஃபத்துல் மஸீஹ் உடைய தபர்ருக் கிடைக்க வேண்டும் என்றும், அவ்வாறு கிடைத்தால் அதனை பாதுகாப்பேன் என்பதுமாகவே இருந்தது. அதனை சிறிது சிறிதாக மற்றவருக்கும் வழங்குவார். அவர்களும் அதிலிருந்து பயனடைவதற்காக மாநாட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கு சிறிது வழங்க வேண்டும் என்று தபர்ருக் வீட்டில் சேர்த்து வைப்பார்.

அவர் கூறுகிறார்: எனது தந்தையை அறிந்தவர் போன் செய்து கூறினர். நான் மீண்டும் அனாதை ஆகிவிட்டது போன்று உணர்கிறோம். மேற்கத்திய நாட்டிலும் நிறைய உதவிகளைச் செய்து வந்தார். இலண்டனில் இருக்கும்போது கிரஷன்ஹால் ரோடுக்கு இடம் மாறி வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிக்கு இடம் அளிப்பதற்காகவும் முழுமையான சேவை செய்யவும் பெரிய வீடு கிடைக்க வேண்டும் என்பது இவரது ஆசையாக இருந்தது. வீடு வாங்குவதாயின் கிலாஃபத்தின் நிழலில் வாங்க வேண்டும். இதனைக் கேட்டு தூரத்தில் செய்யக் கூடாது என்று கூறி வருவார்.

அவர் கூறுகிறார்: மிகவும் களங்கமற்ற முறையில் எனது தந்தையார் உதவி செய்வார். எவராவது கஷ்டப்பட்டால் அவரை மீட்க

இறுதி போதனை செய்வார். எப்போதும் ஜமாஅத்துடன் இணைந்திருக்க வேண்டும்; தொழ வேண்டும். திருக்குர்ஆனை தொடர்ந்து ஓத வேண்டும். பிறகு அல்லாஹ் உதவி செய்வான். இதனைக் கூறியவர் சிறிய மகள் ஆவார்.

பெரிய மகள் மதீஹா முஸ்தஃபா கூறுகிறார்: நிச்சயமாக எனது தந்தை ஒரு கிராமத்திலிருந்து வந்தவர். படிக்கவில்லை. ஆனால் அவரது தொலைநோக்கு எவ்வளவு பெரியது எனில் நிறைய படித்தவர்களை விட மேலே சென்று விட்டார். உலகில் குறைந்த அளவு மக்களே ஆணுக்கும் பெண்ணுக்கும் சம அந்தஸ்து வழங்குவார்கள். ஆனால் இவர் ஒருபோதும் மகள்களை சுமையாகக் கருதியதில்லை. எவருக்கு மகள்கள் இருக்கிறார்களோ அவரது நிலை உயர்ந்து விட்டது என்று எப்போதும் கூறி வருவார்.

அவரது பணி செய்யும் காலம் முடிந்து விட்டது. சொகுசின் நிலை வந்து விட்டது. இவர் தமது மகன்கள் மற்றும் மகள்களுக்கு கல்வி வழங்கினார். தர்பிய்யத் வழங்கினார். எந்தக் குறையும் வைக்கவில்லை. அத்துடன் குழந்தைகள் மீது பாசம் இருந்தும் அல்லாஹ்வின் உரிமை மற்றும் அடியாரின் உரிமையை விட்டதில்லை. ஈது ஆக இருந்தாலும், மகளின் திருமணமாக இருந்தாலும் வேறு பணியாக இருந்தாலும் தொழுகையை விட்டதில்லை. இறைவன் மீது தவக்குல் இருந்தது. அவன் எந்தப் பணியையும் விட்டுவிட மாட்டான் என்று நினைத்தார். ஆனால் இபாதத்தின் குறைவால் இறைவனது கோபத்தின் கீழ் வந்து விடக்கூடாது என்று நினைத்தார்.

இவரது மகன் ஸர்பராஸ் மஹ்மூது கூறுகிறார்: நாங்கள் மூட்டிங் பகுதியில் இருக்கும்போது மஸ்ஜிது ஃபஸ்லுக்கு செல்ல முடியாவிட்டால் வீட்டில் சேர்ந்து தொழுகிறோமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வார். உலகில் எந்த விஷயங்களைக் கேட்டாலும் இறைவனே நிறைவேற்றித் தர முடியும். எல்லாப் பணிகளையும் விட்டு விட்டு தொழுகையை அதன் நேரத்தில் தொழ வேண்டும் என்று கூறுவார். 15 வயது வரை ஃபஜ்ர் தொழுகைக்கு தம்முடன் என்னை அழைத்துச் செல்வார். பிறகு இவரது துஆவின் பரக்கத்தை இப்போதும் நாங்கள் பெறுகிறோம். பள்ளிவாசலிலிருந்து ஃபஜ்ர் தொழுகை விட்டு வரும்போது நான் பள்ளிவாசலுக்குச் சென்றேனா? இல்லையா? என்று ஆய்வு செய்வார். நான் சோம்பல் காட்டினால், அல்லாஹ்வுடன் விசுவாசமற்ற முறையில் நடந்தால் அதனால் உமக்குதான் நஷ்டம். அல்லாஹ்வுக்கு நமது தொழுகையின் தேவையில்லை. ஒவ்வொரு மனிதனும் தமக்காகவே தொழுகிறான் என்பார்.

நோயுற்ற நிலையில் ஆம்புலன்ஸை அழைத்தோம். மிகவும் உரத்த குரலில் மூச்சு வாங்கியது. அப்போது கூட உட்காராமலும் படுக்காமலும், நின்று கொண்டு தொழுதார். மருத்துவமனை சென்று படியேறும்போது கூட எப்போதும் தொழுகையை ஜமாஅத்துடன் தொழ வேண்டும் என்று கூறினார். முதலில் பெரிய வீட்டில் இருந்தார். மாநாட்டின்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகள் 40 பேர் வீட்டில் தங்குவார்கள். இங்கு மஸ்ஜிதுக்கு அருகில் சிறிய வீடு உள்ளது. இங்கு 25 பேர் தான் தங்க முடியும். இருந்தும் மகிழ்ச்சியுடன் அவர்களைத் தங்க வைப்பார். வீட்டை விருந்தாளிகளுக்குத் தந்து விட்டு நாங்கள் சமாளித்துக் கொள்வோம் என்று நான் கேட்கும்போது கூட கூறி வந்தார். எப்போதும் மார்க்கம் உலகம் இரண்டையும் ஒன்றாக எடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும் என்று கூறுவார். பாருங்கள்! இது எளிதல்ல. உலக விஷயம் முன்னால் வரும்போது மார்க்கத்தை முன்னிறுத்த வேண்டும் என்று பிள்ளைகளிடம் போதனை செய்வார். எங்களிடம் எப்போதும் இது அல்லாஹ்வின் ஜமாஅத்துடைய அமானிதமாகும். நமது பணி அதனைப் பாதுகாக்க வேண்டும். அந்த அமானத்தை நாம் வளர்க்க வேண்டும் எனில் ஜமாஅத்திற்கு பயன்படுவதற்காக வளர்க்க வேண்டும் என்று கூறுவார். சந்தா வழங்குவதில் பிற்படுத்தக் கூடாது என்று அறிவுறுத்துவார். மாதத்தின் முதல் நாளிலேயே தாம் சந்தாவை வழங்கி விடுவார். ஜமாஅத்திற்கு நமது சந்தா தேவை என்று நினைக்கக் கூடாது. சந்தா மூலமாக நாம்தான் அல்லாஹ்வின் நிஃமத்துகளை அனுபவிக்கிறோம் என்றார்.

நோயின் இறுதி நாட்களில் வென்டிலேட்டர் வைக்கப்பட்டதும் கோமா நிலைக்குச் செல்வதற்கு முன் இவர் கூறிய இறுதி வார்த்தை இதுவாகும்: சர்ப்ராஸ் மாதத்தின் முதல் தேதி கழிந்து விட்டது. அலமாரியில் கோப்புகள் இருக்கின்றன. அதில் சந்தா கணக்குகள் எழுதப்பட்டுள்ளன. முழு சந்தாவையும் கொடுத்து விடு. எனது போதனையை நினைவில் வை. மாதத்தின் முதல் நாளில் முழு சந்தாவையும் கொடுத்து விட வேண்டும். ஒருபோதும் தாமதப்படுத்தக் கூடாது.

இவரது மாமனார் கிராமத்துல்லாஹ் சாஹிப் கூறுகிறார்: நேசத்திற்குரிய முஸ்தஃபா தமது மனைவியின் உறவினர்களை மிகவும் கண்ணியத்துடன் பேணினார். எனக்கு தமது சொந்தத் தந்தையின் மரியாதையை வழங்கினார். முஸ்தஃபா எப்போதும் இறைவனது இபாதத்திலும் கிலாஃபத்துடன் தொடர்பிலும் கழித்தார்.

இதுபோன்று இவரது மருமகன் பிலால் கூறுகிறார்: திருக்குர்ஆனின் பல்வேறு துஆக்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோள்களின் புகைப்பட நகல் எடுத்து வைத்து எனக்கும் மற்ற உறவினர்களுக்கும் பிள்ளைகளுக்கும் தருவார். இதனைப் படியுங்கள். குர்ஆனிய துஆவை மனனம் செய்யுங்கள் என்று கூறுவார்.

எப்போதும் பார்த்துள்ளேன். மஸ்ஜிது ஃபஸ்லில் தர்ஸ் நடக்கும்போது அதன் நகலை வாங்கிப் படிப்பார். எல்லாருக்கும் படிக்கவும் தருவார். மொபைல் போன் மூலம் அதனை மற்ற அஹ்மதி அல்லாத உறவினர்களுக்கும் பிள்ளைகளுக்கும் அனுப்புவார். அவர்களிடம் போன் செய்து அதனைப் படித்தீர்களா? இல்லையா? என்று கேட்டு தப்லீக் செய்வார். மிகவும் விருந்து உபசாரம் செய்பவர். பொதுவான நாட்களில் கூட தினமும் ஏதாவது விருந்தாளிகளை வீட்டிற்கு அழைத்து வருவார். மாநாட்டின் நாட்களில் 24 மணி நேரமும் விருந்தாளிகளைக் கவனிப்பார். கேட்கவே வேண்டாம். உங்கள் வீடு போன்று எப்போதும் வாருங்கள் என்று விருந்தாளிகளிடம் கூறிக் கொண்டே இருப்பார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தாளிகளுக்கு எப்போதும் முன்னுரிமை வழங்குவார். அவர்களுக்காக எனது வாசல் திறந்துள்ளது என்பார். ஒரு வருடம் ஜல்ஸாவுக்கு வரும்போது இவர் வீட்டில் தங்கியவர் மறு வருடம் வேறு வீட்டிற்குச் சென்றால் மிகவும் சங்கடப்படுவார். எனது விருந்தோம்பலில் ஏதும் குறை ஏற்பட்டு விட்டதோ? அதனால் அவர்கள் வரவில்லையோ? என்று கேட்பார். வாய்ப்பு கிடைத்தால்

**திருக்குர்ஆனிலிருந்து...**

வழிதவறியவன் என்று அல்லாஹ் முடிவு செய்தவனுக்கு வழிகாட்டுபவன் எவனுமில்லை. அவர்களைத் தங்களின் வரம்பு மீறலில் திரியுமாறு அவன் விட்டு விடுகின்றான். (7:187)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

அவர்களை வலுக்கட்டாயமாக அழைத்தும் வந்து விடுவார். தமது மற்ற பணிகளை எவ்வாறு மேனேஜ் செய்தார் என்றால் அது ஒருபோதும் தொழுகைக்காக இடையூறாக இருக்காது. அதனை விட்டு விட்டு தொழுகைக்குச் சென்று விடுவார்.

அதுபோன்று இவரது மச்சான் ஸுஹைல் அஹ்மது சாஹிப் கூறுகிறார்: இவரிடம் மூன்று விஷயங்களில் பைத்தியம் போன்ற ஆர்வம் இருந்தது. 1) கிலாஃபத் 2) கிலாஃபத்துடன் தொடர்பு 3)விருந்தோம்பல். முஸ்தஃபா பாயி உடைய வீடு மாநாட்டின் நாட்களில் விருந்தாளிகளால் நிறைந்திருக்கும்.

தனிச் செயலர் அலுவலர் அஸ்லம் காலித் சாஹிப் கூறுகிறார்: தினமும் அலுவலகத்தில் அவருடன் தொடர்பு இருந்தது. பெரும் சிறப்புகளை உடையவர். துணிச்சல் உடையவர். ஏழைகளை ஆதரிப்பவர். விருந்தோம்பல் செய்பவர். சந்தாவில் முன்மாதிரி இல்லாதவர். பணிகளைத் தேடுவார். அலுவலகத்தில் ஒவ்வொருவரிடமிருந்தும் பணிகளைத் தானே பிடுங்கி செய்வார். இதுவே எனது சம்பாத்தியம் என்று கூறுவார். சரியான பணி செய்தால் மகிழ்ச்சி அடைவார்.

தனிச்செயலர் அலுவலகத்தில் தன்னார்வர் ஃபஹீம் அஹ்மது பட்டி சாஹிப் கூறுகிறார்: 1992 –லிருந்து அலுவலகத்தில் பணி செய்கிறேன். அப்போது ஸ்டால்கள் குறைவாகவே இருந்தன. இவர் தம்மை மாய்த்துக் கொண்டு பணி செய்யும் விசுவாசமிக்க சேவகராக இருந்தார். நிறைய சிறப்புகள் நிறைந்தவர். பொறாமை கொள்ளத்தக்க இவரது சிறப்பு கிலாஃபத்துடன் உள்ள அன்பு, கட்டுப்பாடு, சிறு சிறு விஷயங்களுக்கும் வழிகாட்டல் பெறுதல் ஆகியவையாகும். அல்லாஹ் அவருக்கு பொருளாதார வளம் வழங்கியிருந்தான். எப்போதும் அது குறித்து கூறும்போது இந்த வாசலில் பணி செய்ததின் விளைவு என்பார்.

டாக்டர் தாரிக் பாஜ்வா சாஹிப் கூறுகிறார்: இவரிடம் 1980–81 முதல் தொடர்பு கொண்டுள்ளேன். இவர் பைஅத் செய்ததிலிருந்து வஃபாத் ஆகும் வரை அருகில் இருந்து பார்த்து வரும் வாய்ப்பு கிடைத்துள்ளது. பெரும் சிறப்புகளை உடையவர். அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்தவர். கிலாஃபத்தின் மீது பேரன்பு கொண்டவர். சிந்து வந்து தமது தூரத்து உறவினர் அருகில் சென்று வாழ்ந்து வந்தார். பஞ்சாபில் இவரது நிலம் விஷயத்தில் வழக்கு தொடரப்பட்டது. அங்கிருந்து போலீஸிடமிருந்து தப்பித்து இங்கே வந்தார். அங்கு வந்த இடத்தில் அஹ்மதிய்யத் பற்றி அறிமுகம் ஏற்பட்டது. மூன்று வருடங்கள் அவருக்கு தப்லீக் தொடர்ந்து நடந்தது.

அந்தக் காலத்தில் இவர் அஹ்மதி பள்ளிவாயிலில் தொடர்ந்து அதான் கொடுத்து வந்தார். ஆரம்பத்திலிருந்து அதில் அவருக்கு ஆர்வம் இருந்தது. இறுதியில் ஒரு கனவு கண்ட பிறகு உடனே பைஅத் செய்தார். அந்தக் கனவானது, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் வீட்டிற்கு வருகிறார்கள். புன்னகைத்தவாறு கேட்கிறார்கள். 'இரு குத்தாம் தேவை'. பிறகு சலீம் சாஹிப் மற்றும் இவரைப் பார்த்து சுட்டிக்காட்டியவாறு 'நீர் வாரும். நீர் வாரும்' என்று கூறுகிறார்கள். பிறகு இவர் பைஅத் செய்து விட்டார். பைஅத்திற்கு முன்பிருந்தே ஜமாஅத்தின் இஜ்திமா மற்றும் மாநாடுகளில் கலந்து கொள்வார். பைஅத்திற்குப் பிறகு இவரது களங்கமற்ற நிலையில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. கவனமாகக் குத்பாக்களைக் கேட்டு வந்ததில் அவருக்கு ஒரு நம்பிக்கை பிறந்து விட்டது என்றார். நான் ஒருவனே அஹ்மதி அல்லாத மவ்லவிகளுக்குப் போதும் என்று கூறி வந்தார். எவரும் என் முன் நிற்க இயலாது என்று கூறுவார். பலமுறை உம்ரா செய்ய வாய்ப்பு கிடைத்தது. பிறகு அல்லாஹ் அவருக்கு 2010 –ல் ஹஜ் செய்யவும் வாய்ப்பு வழங்கினான். காதியான் மீது பெரும் அன்பு இருந்தது. முதலில் சென்று வந்தார். வீட்டின் மீது பெரும் ஆர்வம் இருந்தது. பிறகு அதனை ஜமாஅத்திற்கு வழங்கி விட்டார்.

டாக்டர் இப்ராஹிம் நாஸிர் பட்டி சாஹிப் இவருக்கு சிகிச்சை அளித்தார். அவர் கூறுகிறார்: நான் குலாம் முஸ்தஃபா சாஹிபை நீண்ட காலமாக அறியமாட்டேன். இறுதி நோய் வந்தபோதுதான் கன்ஸல்டன்ட் என்ற முறையில் இவரைப் பார்க்க வாய்ப்பு கிடைத்தது. பார்த்த சில காலத்திற்குள் அவரிடம் நான் பார்த்த சிறப்புகள் கூறத்தக்கவையாகும். கொரோனா வைரஸின் தொற்றின் கடுமையால் இவர் அல்லாஹ்வின் விருப்பத்தில் திருப்தி கொண்டவராக இருந்தார். நோய் அதிகமாக இருப்பதால் குணம் கிடைக்காமல் போகலாம் என்று நான் அவரிடம் கூறியது நினைவில் உள்ளது. அல்லாஹ்வின் விருப்பத்தில் திருப்தி கொண்டிருக்கிறேன் என்றார். அவரது முகத்தில் எந்தக் கவலையோ எதுவும் இல்லை. மிகவும் திருப்தியாக இருந்தார்.

இன்னொரு உதாரணம், ஒரு டாக்டர் இவரிடம் கிலாஃபத்தின் மீது அன்பு இருப்பதை உணர்ந்து கூறியுள்ளார். நோய் அதிகமானதாக இருந்ததால் CPAC தர வேண்டியிருந்தது. அது ஆக்ஸிஜன் தருவதற்கான கடுமையான மெஷின் ஆகும். அது சில வேளை மனிதனை நிலைகுலையச் செய்து விடும். வேதனையால் அபாயகரமான நிலைமைக்கு கொண்டு சென்று விடும். மிஷின் வைத்ததால் கடும் கஷ்டம் ஏற்பட்டது. அவரது குடும்பத்தினர் வந்து டாக்டரின் வழிகாட்டுதலின்படி அமல் செய்யுங்கள் என்ற காலத்தின் கலீஃபாவின் தூதுச் செய்தியைக் கூறினர். இவர் உடனே எனது வழிகாட்டல் கிடைத்ததும் ரிலேக்ஸ் ஆகிவிடுவார். மேலும் சகித்துக் கொள்வார். அவரது தைரியம் அதிகம் என்று தெரிய வந்தது. உடலில் திடீரென்று சக்தி வந்தது. ஹோமியோபதி மருந்துகளை குணம் கிடைப்பதற்காக உண்ணவில்லை. அவரது கிலாஃபத் மீது கொண்ட அன்பைப் பார்த்து நான் தாக்கம் அடையாமல் இருக்க முடியவில்லை.

அல்லாஹ் எல்லா மர்ஹூம்களின் தகுதிகளையும் உயர்த்துவானாக. அல்லாஹ் மற்றும் அவனது மார்க்கத்துடன் கொண்ட விசுவாசத்தையும் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றியதையும் பார்த்து அதனை விட அதிகமாக அவர்கள் மீது தமது அன்பைப் பொழிவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று இம்மக்கள் ஷுஹதாக்களில் உயிர்த்தியாகிகளில் அடங்குவர்.

அல்லாஹ் இவர்களின் சந்ததிகளையும் தமது பாதுகாப்பில் வைப்பானாக. அவர்களின் நன்மைகளை தமது வாழ்வில் கைக்கொள்ளும் வாய்ப்பை வழங்குவானாக. அவர்கள் அல்லாஹ்விடம் தொடர்புள்ளவர்களாக வாழ்வார்களாக. அல்லாஹ் மற்றும் ஜமாஅத்துடன் பற்றுமிக்க தொடர்பு கொள்பவர்களாக ஆவார்களாக. பெற்றோர்கள் அவர்களுக்கு செய்த துஆக்களை இவர்களின் ஹக்கில் நிறைவேற்றுவானாக.

……☆……☆……☆……

## திருக்குர்ஆனிலிருந்து…

எம்முடைய அடையாளங்களைப் பொய்ப்படுத்துபவர்களை அவர்கள் உணர்ந்து கொள்ளாவிதத்தில் படிப்படியாக நாம் (அழிவின் பக்கம்) இழுத்துக் கொண்டு வருவோம். நான் அவர்களுக்கு(த் தற்போது) காலக்கெடு அளித்திருக்கிறேன். என் திட்டம் நிச்சயமாக மிக்க உறுதி வாய்ந்தது. (7:183,184)

A.Basheer Ahmad, Melapalayam

*(12 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமநது அன்பிற்குரிய ஜமாஅத்திற்கு திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸுகளின் ஒளியில் ஆளும் அரசாங்கத்திற்கு கட்டுப்படுவது தொடர்பாகவும் விசுவாசமாக இருத்தல் தொடர்பாகவும் வழிகாட்டியுள்ளார்கள். எனவே உங்களுள் ஒவ்வொருவரும் அவர் தம்மை சமூகத்தின் நலனில் உறுதி கொண்டவராகவும், மக்களுக்கு பயனளிக்கக் கூடியவராகவும் ஆக்கிக் கொள்வது அவர் மீது கடமையாகும். நாட்டிற்கும் சிறந்த முன்மாதிரியைக் காட்ட வேண்டும். நாட்டின் கௌரவத்திற்கும் கண்ணியத்திற்கும் களங்கத்தை ஏற்படுத்தும் எந்தவொரு செயலும் உங்களின் மூலம் நிகழ்ந்து விடக்கூடாது.

பிறகு, கிலாஃபத்துடன் இணைந்திருப்பது மிக முக்கியமானதாகும். கிலாஃபத் அமைப்பு நம்மிடத்தில் நிலைபெற்றிருப்பது அல்லாஹ் நம்மீது செய்த மிகப்பெரிய அருளாகும். உங்களின் கைகளில் உள்ள (கிலாஃபத்தாகிய) அது ஒரு உறுதியான, ஒருபோதும் முறிந்து விடாத கைப்பிடியாகும். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கைப்பிடி உடையக்கூடியது இல்லைதான்; ஆனால் நீங்கள் உங்களுடைய கைகளை சிறிது தளர்த்தினாலும் நீங்கள் நொறுங்கி விடக்கூடிய சாத்தியமுள்ளது.

அல்லாஹ் ஒவ்வொரு நபரையும் இதிலிருந்து காப்பானாக. அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடிக்க வேண்டும். ஜமாஅத் அமைப்புடன் எப்போதும் பிணைந்திருக்க வேண்டும் என்ற கட்டளையை எப்போதும் நினைவில் வைத்திருங்கள். ஏனென்றால் இந்த அருளின் காரணமாகவே முழு உலகிலும் உள்ள ஜமாஅத் ஒற்றுமையின் சரடில் இணைந்துள்ளது. மேலும் ஆன்மீக முன்னேற்றத்தின் புத்தம் புதிய இலக்குகளை கடந்து கொண்டே செல்கிறது.

ஆகவே அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், ஆன்மீக பௌதீக செல்வங்களிலிருந்து பங்கு பெறுவதற்காகவும் எப்போதும் கிலாஃபத்துடன் இணைந்திருங்கள்.

நீங்கள் உங்களுடைய ஜமாஅத்தின் பிரதிநிதிகளாக இங்கு ஒன்று கூடியுள்ளீர்கள். உங்களுடைய மிக முக்கியமான பொறுப்பு என்னவென்றால், காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு வழிகாட்டல்களையும் மக்கள் வரை சென்றடைய வைக்க வேண்டும் என்பதேயாகும். இன்று தொடர்பில் இருப்பதற்கு MTA மற்றும் பல்வேறு ஊடகங்கள் உள்ளன. அவ்வாறிருந்தும் பலர் பயன் பெறவில்லை. இப்படிப்பட்ட மக்கள் வரை காலத்தின் கலீஃபாவின் குரல் சென்றடைய வேண்டும்.

உதாரணமாக, ஜுமுஆவின்போது குத்பா சுருக்கம் வாசித்துக் காட்டப்படுகிறது. இதேபோன்று எவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாதோ அல்லது மொழி தெரியாத காரணத்தினால் குத்பாக்கள், சொற்பொழிவுளை புரியமுடியவில்லையோ அவர்களுக்காக அவர்களின் மொழியில் மொழியாக்கம் செய்வதற்கான நிரந்தர ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இதேபோன்று ஜமாஅத்தின் தர்பிய்யத் பணிகளில் ஈடுபடக் கூடியவர்கள் தமது சொற்பொழிவுகள் போன்றவற்றிலும் காலத்தின் கலீஃபாவின் உரைகள் மற்றும் குத்பாக்களிலிருந்து குறிப்புகளை எடுத்துக்கூற வேண்டும். இதனால் தர்பிய்யத்தில் ஒரே நிலைப்பாடு தோன்றும். இது கிலாஃபத் அமைப்பின் மூலமாக அல்லாஹ் நமக்கு வழங்கிய ஒற்றுமை ஆகும்.

அல்லாஹ்வின் அருளால் முழு உலகிலுள்ள அஹ்மதிகளும் காலத்தின் கலீஃபாவின் அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் கேட்கும்போது அவர்களிடத்தில் அசாதாரணமான நல்ல தாக்கம் ஏற்படுகிறது. ஏனென்றால் ஒரு விஷயத்தை ஒருவர் கூறும்போது ஏற்படாத தாக்கம் அதே விஷயத்தை காலத்தின் கலீஃபா கூறும்போது ஏற்படுவதை நாம் அன்றாடம் காண்கிறோம்.

இதற்கு பின்னால் இருக்கக்கூடிய அன்பும், பற்றுதலும் காலத்தின் கலீஃபாவுக்காக நம்பிக்கை கொண்டோர்களின் உள்ளங்களில் அல்லாஹ் உருவாக்கிய ஏற்பாடே ஆகும். ஆகவே இதன் பக்கம் சிறப்பான கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. உங்களுடைய பொறுப்புகளுக்கான உரிமைகளை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பை அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக. மேலும் காலத்தின் கலீஃபாவுக்கு உண்மையான முறையில் உதவி செய்யும் வல்லவராக உங்களை ஆக்குவானாக. ஆமீன்

வஸ்ஸலாம்

எளியவன்

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. மேலும் ஆசியாவே! நீயும் பாதுகாப்பில் இல்லை. தீவுகளில் வாழ்பவர்களே! எந்தவொரு செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதைக் காண்கிறேன். மேலும் குடியிருப்புகள் நாசமாகி விட்டதைக் காண்கிறேன். அந்த ஏக இறைவன் ஒரு காலம் வரை மவுனமாக இருந்தான். அவனது கண்களுக்கு முன்னால் வெறுக்கத்தக்க செயல்கள் செய்யப்பட்டன. அவன் அமைதியாக இருந்தான். ஆனால் இப்போது அவன் அச்சுறுத்தலுடன் தனது முகத்தைக் காட்டுவான். அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை கேட்கக்கூடிய காதுகள் கேட்டுக் கொள்ளட்டும்.

இறைவனின் பாதுகாப்பின் கீழ் அனைவரையும் கொண்டு வர வேண்டும் என நான் முயற்சி செய்தேன். ஆனால் இறை நியதியில் எழுதப்பட்டது நிறைவேறுவது அவசியமானதாக இருந்தது. இந்த (இந்திய) நாட்டிற்கான முறையும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என நான் உண்மையாகவே கூறுகிறேன்.

நூஹின் காலம் உங்கள் கண்களுக்கு முன்னால் வந்து விடும். மேலும் லூத்தின் நாட்டில் நடந்த சம்பவத்தை உங்கள் கண்களாலேயே கண்டு கொள்வீர்கள். ஆனால், இறைவன் கோபத்தை காட்டுவதில் நிதானமானவனாக இருக்கிறான். உங்கள் மீது கருணை காட்டப்படும் பொருட்டு நீங்கள் பாவமன்னிப்புத் தேடுங்கள். எவர் இறைவனை விட்டு விடுன்றாரோ அவர் ஒரு கிருமியாவார்; மனிதர் அல்ல. யார் அவனுக்கு அஞ்சுவதில்லையோ அவர் மரணித்தவராவார்; உயிருடன் இருப்பவர் அல்ல.

(ஹகீகத்துல் வஹி, ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 265)

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக: அல்லாஹ் நாடுவதன்றி எனக்காக எந்த தீமையையோ நன்மையையோ செய்ய எனக்கு ஆற்றல் இல்லை. நான் மறைவானதை அறிந்திருந்தால், நன்மைகளுள் அதிகமானவற்றை (எனக்காக) சேர்த்திருப்பேன். ஒருபோதும் எனக்கு எந்த துன்பமும் ஏற்பட்டிருக்காது. ஆனால் நான் நம்பிக்கை கொண்ட மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பவனும் நன்செய்தி வழங்குபவனுமாவேன். (7:189)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 04 June 2020 Issue No. 23

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**நான் உங்களுக்கு நாட்டுப்பற்று, நாட்டின் மீது விசுவாசம் வைத்தல் தொடர்பாக அறிவுரை கூற விரும்புகிறேன்**

**சூழ்நிலை எவ்வாறிருப்பினும் சரியே! நீங்கள் நாட்டுப்பற்றை மேற்கொள்ள வேண்டும். மேலும் உங்களது நாட்டின் நலனுக்காக துஆக்கள் செய்ய வேண்டும்**

**நாட்டுப்பற்று என்பது ஒரு உண்மையான முஸ்லிமுடைய ஈமானின் பகுதியாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தெளிவாகக் கூறிவிட்டார்கள்**

**எனவே உங்களுள் ஒவ்வொருவரும் அவர் தம்மை சமூகத்தின் நலனில் உறுதி கொண்டவராகவும், மக்களுக்கு பயனளிக்கக் கூடியவராகவும் ஆக்கிக் கொள்வது அவர் மீது கடமையாகும்**

**நாட்டிற்கும் சிறந்த முன்மாதிரியைக் காட்ட வேண்டும். நாட்டின் கௌரவத்திற்கும் கண்ணியத்திற்கும் களங்கத்தை ஏற்படுத்தும் எந்தவொரு செயலும் உங்களின் மூலம் நிகழ்ந்து விடக்கூடாது**

**கிலாஃபத்துடன் இணைந்திருப்பது மிக முக்கியமானதாகும். கிலாஃபத் அமைப்பு நம்மிடத்தில் நிலைபெற்றிருப்பது அல்லாஹ் நம்மீது செய்த மிகப்பெரிய அருளாகும். ஆகவே அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், ஆன்மீக பௌதீக செல்வங்களிலிருந்து பங்கு பெறுவதற்காகவும் எப்போதும் கிலாஃபத்துடன் இணைந்திருங்கள்**

**சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 28,29 மற்றும் மார்ச் 1 ஆகிய தேதிகளில் காதியானில் நடைபெற்ற மஜ்லிஸே ஷூராவின் சந்தர்ப்பத்தில் வழங்கிய சிறப்பு தூதுச் செய்தி**

அன்பிற்குரிய இந்திய மஜ்லிஸே ஷூராவின் பிரதிநிதிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹூ

உங்களுடைய மஜ்லிஸே ஷூராவைக் கொண்டாடுவதற்கான வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ். இதை எல்லா வகையிலும் வெற்றிக்குரியதாகவும், அருளுக்குரியதாகவும் அல்லாஹ் ஆக்குவானாக. ஆமீன்.

இச்சந்தர்ப்பத்தில் தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. நான் உங்களுக்கு நாட்டுப்பற்று, நாட்டின் மீது விசுவாசம், கிலாஃபத்துடன் தொடர்பு மற்றும் காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு வழிகாட்டல்களையும் மக்கள் வரை சென்றடைய வைத்தல் தொடர்பாக அறிவுரை கூற விரும்புகிறேன்.

இன்று உலகின் எல்லா புறமும் அமைதியின்மையும், நிம்மதியின்மையும் காணப்படுகிறது. எந்தவொரு நாடும் எந்தவொரு பகுதியும் இதிலிருந்து பாதுகாப்பாக இல்லை. சில இடங்களில் அமைதியின் சூழ்நிலை சீர்குலைந்துள்ளது. சில இடங்களில் ஏழ்மையும், இனவாத துன்புறுத்தல்கள் காணப்படுகின்றன. மேலும் இதேபோல் மார்க்கங்களின் பெயரிலும் கடினங்களும், ஆட்சேபனைகளும் காணப்படுகின்றன. ஆனால் சூழ்நிலை எவ்வாறிருப்பினும் சரியே! நீங்கள் நாட்டுப்பற்றை மேற்கொள்ள வேண்டும். மேலும் உங்களது நாட்டின் நலனுக்காக துஆக்கள் செய்ய வேண்டும். நாட்டுப்பற்று என்பது ஒரு உண்மையான முஸ்லிமுடைய ஈமானின் பகுதியாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தெளிவாகக் கூறிவிட்டார்கள்.

அல்லாஹ்வின் அருளால் முழு உலகிலுள்ள அஹ்மதிகள் தம் நாட்டையும், தம் நாட்டு மக்களையும் நேசிக்கிறார்கள். மேலும் அமைதிக்கான குடிமக்களாக வாழ்ந்து வருகின்றனர். இதுவே உங்களது குறிக்கோளாகவும் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்முடைய ஜமாஅத் எல்லாவிதக் குழப்பங்களிலிருந்தும், விஷமத்திலிருந்தும் விலகி இருக்க வேண்டும் என போதித்துள்ளார்கள். மல்ஃபூஸாத்தில் ஒரு சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு முறை கல்லூரியில், பல்கலைக்கழகத்தில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இது குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

லாகூரில் மாணவர்கள் தமது பேராசிரியர்களுக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்தபோது நமது மாணவர்களும் அந்த அணியில் இருந்தனர். அவர்கள் இந்த எதிர்ப்பில் இணைந்திருக்கக்கூடாது. தமது ஆசிரியர்களிடத்தில் மன்னிப்புக்கோரி உடனே காலேஜுக்கு திரும்ப வேண்டும் என நான் அவர்களுக்கு கட்டளையிட்டேன். ஆகவே அவர்கள் எனது கட்டளைக்கு கட்டுப்பட்டார்கள். மேலும் தனது காலேஜுக்கு திரும்பி எவ்வாறான ஒரு நல்ல முன்மாதிரியை நிறைநாட்டினார்கள் என்றால் மற்ற மாணவர்களும் உடனே திரும்பி விட்டார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 172,173)

ஆகவே ஓர் அஹ்மதி எந்நிலையிலும் குழப்பத்திலிருந்து விலகி இருக்க வேண்டும். மேலும் நாட்டுப்பற்றின் மிகச்சிறந்த செயல் முன்மாதிரியைக் காட்ட வேண்டும். நம்மைவிட நாட்டிற்கு விசுவாசமாக இருக்கக்கூடிய குடிமக்கள் வேறு யாராவது இருக்க முடியுமா என்ன? நாட்டிற்கு தொண்டு செய்வது குறித்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றவர்களும், தமது கொள்கை, தமது நாடு, தமது சமதாயத்திற்காக எல்லாவித தியாகங்களையும் செய்ய எந்நேரமும் ஆயத்தமாக இருக்கும்படி மீண்டும் மீண்டும் வாக்குறுதி வாங்கப்படுகின்றவர்களும் வேறு யாராவது இருக்க முடியுமா என்ன? எவர்களுக்கு நமது ஜமாஅத் பற்றி தெரியுமோ அவர்கள் இதை நன்கு அறிவார்கள்.

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad